293

293/1594

உ

சிவமயம்.

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்து வரும்

நல்லதங்காள் சரித்திரம்

இரண்டாம் பாகம்.

(52)

OFFICE OF THE REGISTRAR OF ...

D. R. முத்துலக்ஷ்மி - நல்லதங்காள்.

மதுரைத் தமிழ் வித்வான் ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இயற்றியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வியாபாரம்,

மதுரை & சென்னை.

Copy Right] 1933. [விலை 0-4-0.

உ

பரமபதி துணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு அவர்கள், கானமோகன டி. வ. இராஜா மணியம்மாள், டி. என். சுந்தரராவ், ஜெகன் மோகன குப்புசாமி முதலியார் முதலிய நாடகக் கம்பெனி யார் பலராலும் நடத்திவருகிற,

குலசேகரி என்னும்,

நல்லதங்காள் சரித்ரம்

இரண்டாம் பாகம்.

OFFICE OF THE REGISTRAR OF C

9-JAN 1934

MADRAS

மதுரை வித்வான் ஸ்ரீ:

நா. கிருஷ்ணசாமிநாயுடு அவர்களால்,

இயற்றப்பெற்று,

மதுரை, புதுமண்டபம் புத்தகவியாபாரம்,

இ. மா.

கோபாலகிருஷ்ணக் கோனாரால்

தமது

எக்ஸெல்ஸியர் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy Right.

இதன் விலை] 1933. [அணா 4

மதுரைத் தமிழ்வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களியற்றிய

பதிவிரதா பராக்ரமம் அல்லது

சாவித்ரி சத்யவான் சரித்திரம்.

நண்பர்களே! கவனியுங்கள்!! கவனியுங்கள்!!

நமது தமிழ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய "நல்லதங்காள் சரித்திரத்திலுள்ள பாடல்களைப்படித்த கனவான்கள் அவர் பாடல்களையே படிப்பதற்குப் பிரியங்கொண்டு வாயூறாத வர்கள் இல்லை" என்பதை யாவருமறிந்த விஷயமல்லவா?

மெ. நாயுடவர்களியற்றிய இந்தச் சாவித்ரி சத்யவான் சரித்திரத்தில் கலிங்க தேசத்தரசன் ராஜ தர்பாரில் தேசவிசாரணை செய்யும் ஆடம்பர மான பாடல்களும் சால்வபுரியரசனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப் பற்றும் வீராவேசமான பாடல்களும், வசனங்களும் ராஜ தந்திர முறைப் படியும், மிக்கஆக்ரமரோஷ விதிப்படியும் இருக்கும்.

சாவித்திரி தன் சகிமார்களுடன் நந்தவனத்திலுலாவும் காட்சியமைந்த பாடல்களும், சிம்மத்தால் துரத்தப்பட்ட சாவித்ரி, சத்தியவானால் ஆதரிக் கப்பட்ட சமயத்தும், இருவர்க்கும் ஏற்படும் காதல் கலப்பின் சமயத்தும் உள்ள பாடல்களும் தர்க்க வசனங்களும் வெகு சிருங்காரமா யிருக்கும்.

எமராஜன் தர்பாரில் எமபடர்களிடத்தில் அகப்பட்டுத் திண்டாட்டப் படும் சண்டாளன் ஒருவன் தான் செய்த தீயசெய்கைகளைச் சொல்லிப் புலம்புதல் படிக்கப்படிக்கக் கொண்டாட்டமாயிருக்கும். இப்பாடல்களைப் படித்தோர்களும், கேட்டோர்களும் எத்தகையினராயினும் அவர் தீயவழி யில் மனதைச் செலுத்த மாட்டார்களென்பது திண்ணம்

சத்தியவான் உயிர் நீங்கும் சமயம் இருவருக்கும் பிரிவாற்றாமையால் ஏற்படும் சோகரசமான பாடல்களைப்படித்தோர் கல்மனதுடையவராயி னும் அங்கு கலங்காதிருக்க முடியாதென்பதில் ஐயமில்லை.

பதிவிரதா சிரோன்மணியாகிய சாவித்ரி தன் விரதமகிமையால் எமனு டன் பின்தொடருஞ்சமயம் இருவர்க்கும் ஏற்படும் தர்க்கமும், கணவனின் உயிர்மீட்கும் பாடல்களும், வசனங்களும் படிக்கப்படிக்க உருக்கமும் இன்பமுமாயிருக்கும். ஆங்கு தம்பதிகளின் அன்பின் தகைமை வெளிப்படும்

இச்சரித்திரத்திற்கென அமைந்த தமிழருமையான வசனசாதுர்யங் கள் வாசிக்கத்தகுந்தது. இன்னிசையமைந்த பாடல்கள் படிக்கத்தகுந்தது. இடத்திற்குத் தக்கவாறு அமைந்த புதிய வர்ணமெட்டுகள் கேட்கத் தகுந்தது. சொற்பக் காப்பிகளே தயார். 1-2 பாகங்கள் விலை அணா—8

இவரியற்றிய "ஞானமிர்த நந்தன் சரித்திரம்"		0—2—0
,, நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி	,,	0—4—0
,, இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து	,,	0—2—0
,, ஷை. கார்த்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன்	,,	0—1—0
,, ஞானசவுந்தரி சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி	,,	0—4—0
,, சகுந்தலா சரித்திரம் 1, 2 பாகம் ,,	,,	0—4—0

5 3

உ

பரமபதி துணை.

டி. என். சுந்தரராவ், டி. ஜி. ஜெகநாதநாயுடு,
கானமோகன டி. ஏ. இராஜாமணியம்மாள் இவர்கள்
விகசிதமாக நடத்திவருகிற

குலசேகரி என்னும்,

நல்லதங்காள் சரித்திரம்

இரண்டாம் பாகம்.

—(o)—

2685
894.811

விநாயகர்துதி—வெண்பா.

உலக ரமாருமோ ருத்தமியென் றேத்து
குலசே கரிசரிதை கூற—நலமருளும்
வேதத்திலோங்கு விமல கரிமுகமெய்ப்
போதத்தி லோங்கு பொருள்.

[குலசேகரி தன் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு மீண்டும் கானகத்திற் கேகுகிறாள்.]

நல்—அடா! அருந்தவத்திலுதித்த பாலர்காள்! அழுகாது என்பின் வருவீர்கள். இந்தச் சண்டாளியின் வீட்டில் நாமிருக்கலாகாது. இது உங்கள் சொந்த மாமன் வீடன்று. இன்னொரு மாமன் வீடுளது. அங்குசென்று அன்னமருந்திப் பசிதணித்துக்கொள்ளலாம் வாருங்கள் சீக்கிரம்—

என்னசெய்வேன் என்மகனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நல்—வருவீரடா பாலர்களா-நீங்கள் வரிசையாக என்பிறகே-அப்பா
பெறுவீரடா நற்பதவி-நீங்கள்பெருமையோடுசுகமுறவே(வரு)

கா— விருத்தம் சகாரி.

இன்னுமோர் மாமன்வீடங் கிருக்குதென் றெமக்குச்சொல்லி
அன்னையே நீதானிந்த அடர்வனம் புகுவதேனோ
வண்ணஞ்சார் நமதுசொந்த வடமதுரைக்குச் செல்வோம்
பின்னும்நீ வருந்தவேண்டாம் பேசாது திரும்புவாயே

அம்மணி! ஏன் துயரப்படவேண்டும்? பேசாது வந்த வழி திரும்பி, நமது சொந்த நகருக்கேகுவதே உத்தமம்.

நல்—இதோ மற்றுமோர் மாமன்வீடு சமீபித்து விட்டோம். பேசாது வாருங்கள் கண்மணிகளே!

பஞ்சமாபாதகம் படராதோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோதெய்வமே இனி என்செய்குவேன்-நான்
ஆரிடம் சென்றுபால ரோடுய்குவேன்
வையகந் தனிலென் போல் பாவியுண்டோ-பூ
வானிறையீசனே யானும்பெண்டோ
அண்ணன் பதிக்கியானும் வந்தேனையோ-ஓர்
ஆதரவு மில்லாது நொந்தேனையோ
தண்ணவனைத்தரித்த தற்பரனே-நீ
தஞ்சமருள்செய்வாயே சிற்பரனே
மூளியலங்காரிசெய் வாளிக்கோலம்-என
முன்னமேயறிந்திலே னென்ன காலம்
மனதுமிகவும்நொந்து வாடுதீசா-என்
மைந்தர்க்குப்பசியுமே லாடுதீசா
வனத்திலென்செய்குவேன் பாவிநானே-இனி
மனத்திரக்கம்வைப்பாய் என்மேல்தானே

ஆஹா ஜெகதீசா! என்னையும் கவலைக்குள்ளாக்கி வைத்தனையா? ஐயோ என் நாதன் செப்பிய வார்த்தையைத் தட்டி, இங்கு வந்து என்ன பயனடைந்தேன்? தெய்வமே இதுவுமுன் சம்மதியா?

தன— விருத்தம் முகாரி.

மாமனர் பதிநாமுற்று மன்னிய பசித விர்த்துச்
சேமமாய் வாழ்வோமென்று செப்பியே அழைத்துவந்தாய்
கோமுக னீன்ற பாவி கொடியதோ ரத்தை நம்மை
நேமமி லாது செய்தாள் நேரெங்கு செல்வோம் தாயே

என்ன செய்வேன் என்மகனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-புன்னுகவராளி-தாளம்-ஆதி.

இன்னமொரு மாமன்வீடு அந்தோ இருக்குதடா மைந்தர்களே
சொன்னபடி கேட்பிரடா மக்காள் சுகமுறுவீர் பசிதணிந்து

நல்:—பாலர்காள் ! நான் சொன்ன வார்த்தையை நம்பி வருவீர்கள். இதோ சமீபத்தில் இன்னமொரு மாமன்வீ டிருக்கிறது. அதற்கடுத்து என்தமக்கை வீடும் இருக்கிறது, நமக்கு அன்னத்துக்குப் பஞ்சமா வென்ன ? வாருங்கள் சீக்கிரம்.

யூக:—அம்மா ! அப்படியே சீக்கிரம் நடப்போம்.

நல்:—ஹே கைலயங்கிரிவாசா ! "என்னுட்டில் பஞ்சம் தீரும் பரியந்தம் நமதண்ணன் வீட்டிற் சுகம் பெறலாம்" என்று வா இங்கு இவ்வாருயிற்று. காட்டில் வேட்டையாடிய என தண்ணனைக்கண்டபாவி அன்னவர் கூடவந்திருந்தால் இவ்வளவு வராது. என்செய்வது வருவது வந்துதான் தீரும்.

விருத்தம்.

நல்:—பொருந்திய மக்காளுமைப் பொழுதொரு வண்ணமாக
அருந்தலாய் வளர்த்தே னப்பா யாதின்ன லணுகிடாது
இருந்தநீர் இந்தக் காட்டில் இப்படித் துயர் மலிந்து
வருந்திடக் கண்ட பாவி வாழ்வனோ புவியில் நானே

அடா பாலர்காள் ! யோசிக்கும் வேளையில் நாம் உலகத்தில் 'உயிர்விடுவதே' நலமென எண்ணுகிறேன். இருக்கட்டும் நாமேன் இறக்கவேணும்! கெதியில்லாத பாவிகள்தான் இறக்கவேணும், நமக்கென்ன தாய்வீடு, மாமன்வீடு, தமக்கைவீடு, அண்ணன்வீடு முதலிய பந்துக்கள் வீடுகளெல்லாமிருக்கும்போது! யான் செய்தபாவம்

எனது புத்தி என்னபுத்தி? துக்கத்தால் மனதுக்கேற்ற வார்த்தைகளெல்லாம் வருகிறது, இருக்கட்டும் என்னுடன் வருவீர்கள்.

[தனித்து நின்று தனக்குள் ஆலோசிக்கிறாள்.]

ஆஹா! நாம் நமது பிள்ளைகளை ஏமாற்றி, இவ்வாரணியத்திற்குக் கூட்டி வந்து விட்டோம். இனி என்ன செய்வது? நல்லது இருக்கட்டும். நாம் நமது பிள்ளைகளுடன் உயிரை மாய்த்துக் கொள்வதே சரி! எவ்விதமாய் உயிரை மாய்த்துக்கொள்வது? சரி சரி. நாமொரு பாழுங்கேணியில் வீழ்ந்திறப்பதே நலம்.

தில்லாம்திரி தில்லாம்திரி என்ற வர்ணமெட்டு.

இராகம்-அபுரூபஉசேனி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

நல்—ஐயோஇதுவிதியோ கூடலானார்செய்தசதியோ
வையகத்தில்நானிருந்தால் வசைகள் மெத்தவாமே

ஏனோயானும்பெண்ணெனவே எடுத்தேனிந்த ஜென்மம்
யானோஉனக்காகாதவள் ஆசிவமேகன்மம்

நாதன்சொல்லைத் தீதென்றெண்ணி நானே இங்குற்றேனே
பாதகியாய்ப்போனேனென்றோ பாமேநீக்கைவிடுத்தாய்

அண்ணன்வீடுநண்ணிமெத்த அருமைபெறவென்றே
எண்ணிவந்ததற்கு நீயொன் றெண்ணிமுடித்தாயே

பாவிமூளி அலங்காரிசெய் பாதகத்தினாலே
ஆவிவிடஎண்ணமுற்றேன் ஆண்டருளிக்காலே

ஹே! ஜெகதீசா! பதிவார்த்தை தட்டிய பாவிக்கு இக்கெதியா விடுவாய்? இன்னும் கொடிய தண்டனை செய்வதற்கு உனக்கதிகாரமுண்டு. நீ சர்வசுதந்திரனல்லவோ? ஹே சிவமே நீயே துணை.

கோபாலர் பிரவேசம்.

நங்—அண்ணா! நமது குலத்தில் சாட்சாத்பரமபதியாகிய "மஹாவிஷ்ணுவே" முன்னொரு காலத்தில் அவதரித்தாரென்பதாய் ஆன்றோரால் அறிந்திருக்கிறேன். ஆகையால் அந்த அரனயனாலும் புகழமுடியாத மகிமைவாய்ந்த சாட்சாத் ஸ்ரீமந்நாரா

யனனுடைய பெருமையைச் சிறிதளவுகேட்டு, ஆனந்தங் கொள்வோம், அன்னவர்மீது சில கீர்த்தனங்கள் பாடுவோம், அவப்பொழுதினும் தவப்பொழுது மேலன்றோ?

[கோபாலர்கள் வனத்தின் கண் பஜனைசெய்கிறார்கள்.]

முருகன் திருமால் மருகன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-அடாணா-தாளம்-சாப்பு.

பல்லவி.

மனமே துணை யாரிகத் தித் தினமே-உன்றன்
மருளற்றினி யருளுற்றிட கரிநத்திய பொருளைப்பணி (மன)

அநுபல்லவி.

இனவன மேயக் கனகுழ லாதிப்பெண் ஈட்டமுறுமாயன்-நமக்
கின்னலே துன்னவ ருணச யனவ லீனமறுதூயன்
சினமொடுதியர்சி ரத்தையறுத்தவன்
சித்தாயாதித்தன்ர தத்தைமறுத்தவன்
முனமெய்த்துறவர்க்கு முத்தியளித்தவன்
மூலப்பொரு ளேலத்திரு மாலைப்பெரு மாலைப்பணி (மன)

சரணங்கள்.

கஞ்சமு தஞ்சொரி வஞ்சியைய முஞ்சத்த ணங்கொண்டு மிஞ்சினஉன்-உடன்
நத்துவ வத்தோருக் கித்தலம் அத்தலம் நன்றுபுரிமுனவன்
பஞ்சத்தே ஆயர் பதி புகுந்தோங்கினன்
பாரிலாக்க ருயிர்களை வாங்கினன்
கஞ்சவிரவினல் கல்லொன்று தாங்கினன்
கருணைக்கொரு வுருவாகிய அரனைச்சீ தரனைப்பணி (மன)

அந்தமி குந்தகோ விந்தா கந்தோறுற் றுவமுதுண்டகணன்-உடன்
அங்குறுவங்கைப் பொங்கமாச் சங்கரித் தானந்தங்கொண்டவணன்
பந்தமறுத்த படிவரை ஏற்பவன்
பண்ணவர்க்கின்னும் படரின்னல்தீர்ப்பவன்
சந்தன்கிருட்டின சாமியைக் காப்பவன்
சதகம்பனே அதமேபுரி இதமாயவன் அடியேபணி (மன)

காந்திமஹான் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகசுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரிகேசவா-ஓம்

ஆதிநாராயணஸ்ரீ அரிகேசவா ஓம் (ஆ)
அரிகேசவா - கிருபை - அருள்கேசவா ஓம் (ஆ)

அநுபல்லவி.

சோதிசுயம்ப்ரகாசா சுகிர்தப்ர தாபநேசா
தொந்தா அடிமையென் சிந்தா குலமற -
வந்தாளரியப தந்தாமறை ஆதி (ஆ)

சரணம்

தாமோதராமுகுந்தா சகலமதசம்பந்தா
சங்கரஹரஹர எங்கினும்நிறைபர
தங்குமென்வினையற இங்கிதமதுதர (ஆ)
அன்பர் தமக்குரியசாய் ஆனையனுக்கரியாய்
அத்திக்கொருமுறை பத்திக்கருளிய
முத்திப்பிரணவ நித்யப்பிரமமே (ஆ)
சந்தச்சாபவித்வ தமிழ்க்கிருஷ்ணசாமி தத்வ
தர்மபுரந்தர மர்மநிரந்தர
பிர்மசுதந்தர சர்வதுரந்தர
சதுர்மறைபுகழ்பெறு முரகரியெனுமொரு
விதரணமலர்மகள் மருவியபுயதிரு (ஆ)

வேறுயெனைவிடலாகுமா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

நாராயணா நந்தகோபனா-நாரா (நந்)
பாராயணம் புரி பக்தனைக்கோரி
பரமதயாளுவந்து பார்த்தருள் புரி-எனைக்
காத்தருள் புரி வினை தீர்த்தருள் புரி-நின்
பாதபங்கயத்திற் சேர்த்தருள் புரி
பாராமுகமேது பாமரன் மீது
பாருலகில் நாரியர்கள் மாரணஞ்சூது-என்னைப்
பற்றவொண்ணாது-பந்த பாசமெண்ணாது-வித்வ
பாலகிருஷ்ணன் சொற் பாட நின்மீது-நிதம்
பாதுகாப்பது முன் பாரமிப்போது (நா)

[நல்லதங்காள் கோபாலர்களிடம் வந்து, பாழுங்கிணறு இருக்கும் இடமெதுவென்று விசாரிக்கிறாள்.]

நல்— விருத்தம்.

ஆதவ குலத்துதித்த அண்ணரே அறிவுள்ளோரே
நீதமாய்ப் பசுக்கள்மேய்க்கும் நிதியரே நிறையுள்ளோரே
காதிரண் டடைக்குதெந்தன் கண்மணி மக்களுக்கும்
போதவே நீருந்தப் பொய்கையெங் குளசொல்வீரே

தாயையும்விட்டுத் தனித்திருந்தால் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஆதவகுலத்தி லுதித்தவ ரேயொரு
ஆழக்கிணறெது காணீர்களோ-ஐயோ

பாதையறியாது வேட்கையால் வாடினோம்
பாழுங்கிணறெது காணீர்களோ

நான்பெற்றதனயர்க்கு நாவறுவரட்டுது
நானிலம்புகழுறும் கோபாலரே-உங்கள்

தேன்பெற்றகனிவாயால் செப்பிடுவீரேயான்
தேடுங்கிணறெவண் கோபாலரே

வெயிலதுமலிவதால் வேகுதுளமதடி
மேனியுருகுது கோபாலரே-சற்று

ஓயினுடனெங்களுக் கோதிடுவீராகில்
உற்றிடுவீர் புண்யம் கோபாலரே

ஹா! புகலவும், புகழவு மொண்ணு யாதவகுலத்திலுதித்த பாலர்காள்! என் அருமைப் பாலர்களும், யானும் தண்ணீர் வேட்கையால்வாடுகிறோம். ஒரு ஆழக்கிணறிருக்குமிடம் செப்பவேணும்.

கோ:—அம்மா! தங்களைப்பார்த்தால் இம் மதுரைமா நகரைப் பரிபாலனம் பண்ணும் எமதிறைவனாகிய நல்லண்ண மகாராஜன் முகக்குறி காட்டுவதால் தங்களைப்பார்த்தவுடன் எமக்கு மெய் வருந்துகின்றது. ஆனல் இப்பொழுது கறந்த ஆவின் பால்

எதேஷ்டமாக வைத்திருக்கிறோம். அதைத்தாங்களும், உமது பாலர்களும் சாப்பிட்டுச் சோகம் தணிந்து போங்களம்மணி!

நல்-கோபாலர்காள்! நான் எனது சொந்தநகர் போய்ச்சேருமவரை எமக்குச் சுகபோஜனங்கள் யாதொன்றும் வேண்டியதில்லை. ஆகலால் தயைசெய்து, கிணறிருக்குமிடம் காண்பியுங்கள்.

கோ—தாயே! அப்படியானால் அதோ மேற்பாலிருக்கும் கிணற்றுக்குச் செல்லுங்கள்; ஆனால் வெகு உஜாராக இறங்கவேண்டும். ஏனெனில் ஆழமதிகம்; அது ஒரு பாழுங்கிணறு.

நல்—ஆனால் அப்படியே செய்கிறோம்.

[நல்லதங்காள் கிணற்றருகிற் சென்று தன்மக்களோடு வருந்துகின்றாள்.]

நல்— விருத்தம் முகாரி.

பாழ்ங்கிண றிதனைக்காணப் பயமிகத் தோற்று தந்தோ
வாழ்வது வெறுத்துநாமும் மடிந்திடப்போனோம் மக்காள்
தாழ்விது செய்தாள்நம்மைச் சதிகாரி அண்ணன்தேவி
ஊழ்விதி இனிமேல்நாமிவ் உலகினி லிருக்கொண்ணாதே

பசுபதியாகிய என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

மதிப்பெல்லாங்கெட்டது விதிப்படிவிட்டது
வாழ்வும் வேணுமோ
மக்களா மக்களா மக்களா (மதி)

ஆறிலுஞ்சாவுதான் நூறிலுஞ்சாவுதான்
தேறிக்கொள்விசிதை
மக்களா மக்களா மக்களா (மதி)

அண்ணியாரிடத்தினில் அவதிப்பட்டதுபோதும்
ஐயோயிதற்கென் செய்வோம்
மக்களா மக்களா மக்களா (மதி)

ஒருமயிருதிர்ந்தாலும் கவரிமான்வாழாது
உடல்போயுயிரிங்கேது
மக்களா மக்களா மக்களா (மதி)

ஒக்கப்பிறந்த எழு மக்களா மக்களா
ஒருமையாய் மாள்வோமடா
மக்களா மக்களா மக்களா (மதி)

பாழுங்கிணற்றில் வீழ்ந்து மாளுவதேநலம்
பாவிநானென்னசெய்வேன்
மக்களா மக்களா மக்களா (மதி)

வாடாமதிமுகனே ஓடாதே என்சுதனே
நாடலாம் ஈசன் பதம்
மக்களா மக்களா மக்களா (மதி)

மலடிவயிற்றுமகன் போலே என்ற வர்ண மெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாழுங்கிணற்றினிலே தானே பெற்ற
பாலரைத் தள்ளவும் போரேனே இனிப்
பாரினிலுயிர்தரியே னேனே மடிந் திடுவேனே
கூழுங்கொடாமலண்ணன் தேவி ஐயோ
கொடுமைசெய்தாளம்மா பாவி கும்பி
கொதிக்கின்றதனலாகவே தாவி தரியேனாவி
காசிபனென் துரைசொல் மீறி பஞ்ச
காலத்தினால் அலவோ நாரி ஏழு
காளையருடனிறந்திடத் தேரி விட்டேன்பழிகாரி

பட்டாபிஷேகம் படைத்திந்த என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-அடதாளம்.

கண்ணிகள்.

எந்தனருமைமகனே நாமிங்ஙனம்
வந்துமேமாளவென் றந்த அயனுமு
கந்துவரைந்தானேடா நமது சி
ரந்தனிலேயோ வாடா நாம்
தாகவிடாய்தீர்த்திடுவோம் பார்த்திடுவோம் அந்தா லோகமதை

பூக—அம்மாயீதென்ன அ நியாயந்தெய்வத்தின்
சம்மதியாருமோ இம்மாதிரி நீ
எம்மையேன் கொல்லுகிறாய் கிணற்றினில்
விம்மியே தள்ளுகிறாய்
ஆனாலினி நானுனக்கா காதவனோ அடிதனைப்போற்றுகிறேன் ()

நல்—அப்பாநீயெந்தனடிதனைப் போற்றினல்
தப்பிப்பிழைப்போமென் றெப்பியேயிந்தத்
தந்துகள்கற்றுயோடா மனமிக
நொந்திடப்பெற்றுயோடா அடா
ஆரிடுசாபமோ நேரிடலாயின பாரி லினியிலா தாவியிழப்போமடா

மூக—அந்தகன்வந்துசே யாவிகொண்டேகையில்
சிந்தையும்நொந்து சினந்துநினைந்து
பந்தமாயேங்கிடுவார் பெற்றவர்
அந்தோவென்றுங்கிடுவார் அம்மா
பிள்ளை பெறு மலடியோநீ கொல்லுகிறய் ஐயோயிக்கானகத்தில்.

அம்மா! உலகத்தில் எது எப்படி இருந்தபோதிலும் பிள்ளை வேண்டுமெனப் பெருந்தவம் செய்வார்கள். நிற்க,

"மக்கள்மெய்தீண்ட லுடற்கின்பம் மற்றுமவர்
சொற்கேட்ட லின்பம் செவிக்கு"

எனத்திருவள்ளுவர் இசைத்திருப்பதைநாம்முன்னமே படித்திருக்கின்றேம். மேலும் பிள்ளையில்லாதவர்களுக்குமோட்சமில்லை. இது கண்கூடாக் கண்டகாட்சி. இக்கருத்துட்பட,

"மகப்பெறுமானிடர்கள் வானவர்தம்மூர்க்குப்
புகப்பெறுர் மாந்தராய்ப் போந்து" என்பதாயும்,

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ-இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாத வர்"

என்பதாயும் ஆன்றேர்களால் கூறப்பட்டிருக்கின்றன. இப்படியிருக்க நீயே எங்களைக் கொல்வதானல் நாங்களென் செய்வோம் தாயே! இதுவும் நமது காலந்தான் போலும்!

[நல்லதங்காள் இளைய ஆறு குமாரர்களையும் தள்ளியவுடன் மூத்த குமாரனுன குணசீலன் சொல்லுதல்.]

எல்லாம்துறந்த என்முன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

அன்னையேயேனிந்தவிதம் அந்நீதமாய்க்கொல்லுகிறாய்
என்னருமைத்தம்பிகளை இக்கிணற்றில் தள்ளுகிறாய்
ஆயேது இச்சூது
ஆசைவார்த்தைசெப்பியிங்குமோசஞ்செய்யநீ துணிந்தாய் (அ)

நல்:—மூளியலங்காரிசெய்த மோசத்திற்கென்செய்வமடா
தாலமதில் நாமிருக்கத் தருமோசொல் என்மகனே
தாங்குவார் ஈங்குண்டோ
தாரணிக்கேளினமாகும் தர்க்கமேன்வருவாயடா (மூளி)

கு:—ஓடிநான்பிழைப்பேனம்மா உன்பேரைச்சொல்வேனம்மா
பாடிநீயழைக்கவேண்டாம் பாவியெனைக்கொல்லவேண்டாம்
பாதகம் தோதகம்
பண்ணுதேநீயென்தன்தாயே சின்னவன்யானுந்தன்சேயே (ஓ)

நல்:—பிழைக்கவிடமேதடா பேய்மகனே நீயோதடா
வழக்கெடுத்தாடவோடா வந்துதித்தாயென்வயிற்றில்
வாடாதே ஓடாதே
வாதுசெய்யவேண்டாமடா சோதரர்கள் மாண்டாரடா (பி)

குண:—தந்தையிடம்நானேசென்று தமியேன்பிழைப்பேனம்மா
நிந்தையாகப்பேசவேண்டாம் நின்னடிக்குச்சரணமம்மா
நீதியோ ஞாதியோ
நீயுமுடன்வந்திடுவாய் நேயமுடன்சென்றிடுவோம் (த)

நல்:—அடா கண்மணி! நீயுனது அருமைத்தம்பிமார்களை யெல்லா மிழந்து, நீமட்டும் உயிரோடிருந்தால் உலகமே உன்னைப் பார்த்து ஏசும். ஆகையால் நாமும் மடிந்துவிடுவதே சிலாக்கியம். வா! வீணாகக் காலதாமதஞ் செய்யவேண்டாம்.

குண:—உள்ளபடி உந்தனுக்கொன் றுரைப்பேனதுகேளம்மா
எள்ளுந்தண்ணீருமுனக் கென்றுமிறைப்பேனம்மா
என்னையே அன்னையே
ஏனேபிடிக்கவாராய் நானேசிறுவனம்மா (உ)



நல்:—ஏண்டா என்னோடுஇன்னும் எதிர்த்துமொழிபேசுகிறாய்
வேண்டாமோடாதேகில்லு வேகங்காட்டுறாயோசொல்லு
வேளையே நாளையே
விண்ணவர்பதிபோய்ச்சேர்வோம் நண்ணியேவருவாயடா (ஏ)

அடா கண்மணி; என்னருங்குழந்தைகளாறு பேரும் இறந்து விட்டனர். இனி நீயிருந்து எனக்கு எள்ளுந்தண்ணீரும் இறைப்பதை நான் பார்க்கவாபோகிறேன். அது கிடையாது. வீணே குதர்க்கஞ் செய்யாது வந்துவிடு.

அம்மணிநீயென்னகரம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-பிலஹரி, தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

குண:—எத்தனைசொன்னாலும்முன்றன் சித்தமிரங்காத தென்ன
தாயே என்றன் தாயே
நல்:—அத்தனருளாலிங்கனஞ் செத்துமடிவோமடா
சேயே என்றன் சேயே
குண:—போனதுபோகட்டும்நீயும் நானும்பிழைத்தேகிடுவோம்
தாயே என்றன் தாயே
நல்:—ஏனோஇந்தமதியுனக்குண் டானதுநீசொல்வாயடா
சேயே என்றன் சேயே

குண:—வருடமொருதெவசமிட வையகத்தில்நானிருப்பேன்
தாயே என்றன் தாயே

நல்:—புருடனுண்டுதெவசமிடப் பொங்கமாய்மடிவோமடா
சேயே வரு வாயே

அடா குழந்தாய்! இது என்ன புத்தியுனக்கு? "போனவர்களெல்லாம் போகட்டும், நாம் மாத்திரம் உயிரோடிருப்போம்" என்றனையே! அடே உனது உயிரென்ன சர்க்கரையா, அல்லது என்றுமிறக்காத வரம்பெற்று வந்தனையா?

குண:—பாக்கியில்லாதேழுபேரைப் பாழ்ங்கிணற்றில்தள்ளலாமோ
தாயே இங்கு நீயே

நல்:—போக்கில்லாத தாலேநாமும் போய்மடிவோம் தனயருடன்
சேயே வரு வாயே

குண:—தந்தையோடு சுற்றமெல்லாம் தானிருக்கமயங்குவதேன்
தாயே இனி நீயே

நல்:—சந்தையின்கூட்டம்அதெல்லாம் சற்குணனேநம்பவேண்டாம்
சேயே இனி நீயே

பலமகஜலோட்டி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

தனயனேநீவாடா தாவமதிலோடா
தாய்வார்த்தை தள்ளாதடா-உனைப்பெற்ற
தாய்வார்த்தை தள்ளாதடா
வினயமீதென்று வீணெண்ணங்கொண்டு
வேகமாயோடாதடா தடுத்துநீ
ஏகவும் கூடாதடா
வா வா ஏகவும் கூடாதடா அப்பா
எனையேநீபெற்ற அனையெனமுன்னை
தெங்குநீபோராயடாவாவாஎங்குநீபோராயடா (தன)

குண:—ஈன்றவளே யென்னை *ஈரவெனநினைத்தால்
என்ன நான் செய்வேனம்மா சொல் சொல்
என்ன நான் செய்வேனம்மா
நான் றனியேசென்று நாட்டிலெவரையும்
நண்ணிப்பிழைப்பேனம்மா தொழிலெதுவும்
பண்ணிப் பிழைப்பேனம்மா
போ போ நண்ணிப்பிழைப்பேனம்மா
என் றனியேவாராய் ஏன் றனொடுசீராய்
ஏகுவாய்வந்தவழி போ போ ஏகுவாய் வந்தவழி (ஈ)

நல்:—தோகனே நீயுன் சோதரரைவிட்டுத்
தொல்புவி யாளலாமோ உயிருடனும்
நல்புவி வாழலாமோ
வா வா நல்புவி வாழலாமோ
வேதனைசெய்யாதே சோதனமிப்போதே
வேகமாயோடாதடா நில்நில்
வேகமாயோடாதடா வாவா (தோ)

குண:—அம்மாநீதானே அன்னவரைக்கொன்ற
அந்தகனுகிவிட்டாய் எனதருமைத்
தந்தையைத் தனியேவிட்டாய்
போ போ அந்தா மாக்கிவிட்டாய்
சும்மாநீயென்னைத் தொடர்வதிலென்னே
சீக்கிரம் நீதிரும்பிப் போபோ
சீக்கிரம் நீ திரும்பி (அ)

அம்மா! ஏன் என்னேடு தொடர்ந்து வருகிறுய்? ஐயோ நான் இங்கிருந்து உங்களுக்குக் கைங்கரியம் நடத்திக்கொண்டிருந்தால் நீங்கள் மோட்சபதவியில் சுகமாய் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள். என்னையும் கொன்றுவிட்டால் மோட்சலோகம் இந்தப் பக்கம் உள்ளதெனத் திசையைக்கூட எவரும் காண்பிக்க வரமாட்டார்களே! இது ஏன் தெரியவில்லை? யோசிக்கவேண்டும் தாயே.

நல்:—அடா குழந்தாய்! நானுனக்கு எவ்வளவு சொல்லியும் நீ சொன்னதைச் சொல்லித் திரும்பத் திரும்ப வாதாடுகின்றனே! இதோ பிடித்துக்கொண்டேன்; வா பின்னல் பேசாதே.

*ஈர—கொல்ல.

தினைதூவும்புனமீது கவணேந்தி என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்- தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

குண—தருணத்தி லேசன்ற தனையரைக் கொல்லவுந் தாயே நீ
துணிந் தாயே நீ-அடா

நல்—வருவினைவாராது திருமோநீசெப்பாய்
சேயனே கனி வாயனே

குண—மாமன்வீடென்னவே ம்மைந்தரைக் கூட்டிவந்
தாயேநீ எந்தன் தாயேநீ-அப்பா

நல்—நாமென்னசெய்வது நான்முகன்செயலடா
சேயனே கனி வாயனே

குண—அம்மான்வீடுற்றுச்சு கம்மாயிருப்போமென்
றுயேநீ எந்தன் தாயேநீ-அந்தப்

நல்—பெம்மானருளுக்குப் பின்னிடலாமோடா
சேயனே கனி வாயனே

குண—இன்னொருமாம னிருக்கிருனென்றுசொன்
னுயேநீ எந்தன் தாயேநீ-ஆமாம்

நல்—எந்நோமாக எதிராடி நிற்கிருய்
சேயனே— கனி வாயனே

குண—நாயேன்நின்பேர்செப்பி நாட்டிற்பிழைப்பேன்வி
டாயோநீ எந்தன் தாயேநீ-கண்டோர்

நல்—தாயற்றுனென்றுன்னைத் தலையிலடிப்பாரே
சேயனே கனி வாயனே

அடா! கண்மணி! உன்னை உயிருடன் விட்டு, நான் செத்தால் உலகத்தில் "தாயற்ற பிள்ளை" என்பதாய் உன்னைக்கண்டோரெல்லாம் தலையிலடிப்பார்கள். அது எனக்குக் குறைவு, இதோ கிணற்றுக்கு வந்துவிட்டோம், இதோ தள்ளிவிட்டேன், விழுவாய்.

[நல்லதங்காள் ஏழுவரையும் கிணற்றில்
தள்ளிவிட்டுத் தானே துயரமுறுகிறாள்.]

ஐயையோ நானொருபெண் என்ற வர்ணமெட்டு.

இராகம்-நீலாம்புரி-தாளம்-திரிபுடை.

கண்ணிகள்.

பூதலந்தன்னிலென்போல்   புகலஎவருமுண்டோ
புலம்பித்தவிக்கவைத்தாய்   தெய்வமே-தெ-தெ
சோதரரிடஞ்சென்று   சுதருடன் யானுமின்று
சுகிர்த மடையவந்தேன்   தெய்வமே-தெ-தெ (தெ)

அனியாயம் அனியாயம்   அண்ணன்தேவியால்நாங்கள்
ஆவியிழக்கவைத்தாய்   தெய்வமே-தெ-தெ
இனிமேல் இவ்வுலகினி   லிருப்பதாகாததினால்
இறக்கத்துணிந்துகொண்டேன்   தெய்வமே-தெ-தெ (தெ)

மக்களைக்கொன்றபாவி   மாபாவியானேனையா
மதுரைநகரதனில்   தெய்வமே-தெ-தெ
திக்கற்றபாவியானேன்   தேகமற்றாவியானேன்
தீராவசையிலானேன்   தெய்வமே-தெ-தெ (தெ)

பூணுமாங்கல்யந்தன்னைப்   பூமிதனில்கழற்றிப்
பொருந்தவேவைத்தேனிதோ   தெய்வமே-தெ-தெ
காணுதெவர்கண்ணுக்கும்   கணவர்க்கும்   தமையர்க்கும்
காணும்படியருள்வாய்   தெய்வமே-தெ-தெ (தெ)

நாங்களொன்றெண்ணிவர   நலியும்படிநீயொன்று
நாரியென்பால்நினைத்தாய்   தெய்வமே-தெ-தெ
பாங்கான தனயரும்   பாவியானுமிறக்கப்
பங்கயன்விதித்தானோ   தெய்வமே-தெ-தெ (தெ)

ஆஹா ஜெகதீசா! என்னையும் இவ்விதிக்காளாக்கினையா! இந்தப் பூவுலகில் என்போன்ற மாபாவிகள் ஒருவருமில்லையே! என் நாதனறிந்தால் உடனே உயிர்விடுவார்! ஆஹா எனது நாட்டிற் பஞ்சமுறவும், அதினாலெமது ராஜ்யமிப்படிப் போகவும், நாங்கள்

ஜீவிக்க வகையிலாது என் நாதன் வார்த்தையைத் தட்டி, என் பிள்ளைகளையும் கூட்டி அண்ணன் வீடு வரவும், என தண்ணனுக்கு வாய்த்த சண்டாளியாகிய "மூளியலங்காரி" இப்படிச் செய்யவும், அதனல் என் பர்த்தாவிடம் போவது குறைவென்றெண்ணி, இந்தப் பாழுங்கிணற்றில் வந்து ஒக்கமடியவுமா என்னுடைய லலாடத்திலும், என் பிள்ளைகளுடைய லலாடத்திலும் எழுதி வைத்தனே? ஆஹா சிவமே! என்னை இவ்விதமான அலங்கோலப் படுத்த வேணுமென்பதாய் உனக்கு மனம் வந்ததா? நான் பஞ்சந் தீரும்வரை என் பிள்ளைகளைக் குறைவிலாது வளர்த்து, நானும் சுகஜீவனம் பண்ணிக்கொண்டு, போகலாமென்றல்லோ வந்தேன். வந்தவிடத்தில் இப்படி நேர்ந்துவிட்டது. சரி, அது போகட்டும்!

கலித்துறை.

நங்கை இனிமேல் நலிவதி லென்பயன் நானமைத்த
தங்கப் பணியி னடையாளங் கண்டென் தமயருமே
இங்குவந் தெம்மை எடுத்துக் களித்து மிகபாத்துள்
எங்கும் புகழத் தகனஞ் செயவரு வீச்சுரனே

வெண்பா.

ஆதிசிவ சங்கரனே யானுங் கழற்றிவைத்த
சோதிமிகு மாங்கல்யந் தொன்மைபெறு-மேதினியில்
மலையாக என்பெயரிம் மானிலத்தி லென்றும்
நிலையாக நீயே நினை.

ஹே! கைலயங்கிரிவாசா? இதோ கிணற்றில் விழப்போகிறேன். ஆனல் என் சகோதாருக்கு மட்டும் இது மாங்கல்யமாகத் தெரியவேண்டும். மற்றவருக்கு மலேயாயமாட்டும்.

[நல்லதங்காள் கிணற்றில் விழும் போது பிள்ளைகளைப் பார்த்துச் சொல்லும் சிங்கார பத்தியம்.]

இராகம்-ஆனந்த-பைரவி.

ஒவ்வியகணவனோ ரூரினிலோங்கிட
ஒண்டியாய்ப்பாவியா னுங்களோடு
செவ்வுறுமடவியில் சேமமுமற்றுநாம்
செல்வமுமற்றுமே சின்னமாகத்
துவ்வுதற்கன்னமும் தூயநீருமிலாத்
துன்னுமிக்கிணற்றினில் துஞ்சவோம்
உவ்வியில்மான்மகன் உகந்துமேவரைந்தனே
உமைபதி செயலிதோ உசிதமக்காள்

முடுகு.

முன்செய்தவினைவந்து மூண்டதோடா
மூதவர் சாபமாய் முடிந்ததோடா
என்செய்வேனெழுவரு மொக்கமாண்டீர்
இதோயானுமுங்களோடுவீழ்ந்திட்டேன்கற்பதவி
வாழ்ந்திட்டேனே

[காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்த நல்லண்ணமகாராஜன் தன் நகாடைந்து, அரமனையுற்ற சமயம் தன் நாயகி அங்கு வரவேற்கிருள்]

சும் சும் சும் பியாரி என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம்-தேசிக-கமஸ்-தாளம்.சாப்பு.

கண்ணிகள்.

நாதாஉமதிரு பாதாரவிந்த நறுமலர்க் கடியவள் வந்தனமே
போதா தருகிகர் நீதாமதுரையா பூபதியே எனக்கதிபதியே

பூசுர ரேற்றிய மாசிலா நேசனே
பொன்னிகருந்தேகனே உன்னிதவைபோகனே (நா)

மூ—பிராணநாதா! அடியாள் வந்தனம்.

ரா— அரேசாதுமான் ஜாவுரே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

என்-தாரமே நல்ல உபசாரமே (என்)
சந்தோஷம் சிந்தைமகிழ்ந்தேன் கெம்பீரமே (தா)
காரணம் வேறென்ன காணேன் நானேயகங்
களித்தேன் களித்தேன் களித்தேன் களித்தேன்
கண்டவுடனே தொண்டுசெய்கிறாய்
பெண்டிருனைப்போல் உண்டோ உலகில் (தா)
கணவனைத் தெய்வமாய்க் கருதிய பதிவிரத
கன்னியே கன்னியே கன்னியே கன்னியே
கனியைநிகர்த்திங் கினித்திடு நல்லாய்
இனிமேலெனக்கென் மனக்குறை சொல்லாய் (தா)
தன்னைப்போல் அன்யரைத் தாங்கிடு மாங்குயில்
தங்கமே தங்கமே தங்கமே தங்கமே
தருணங்கண்டு வரவுகொண்டு
சரணமென்றாய் அருகுநின்றாய் (தா)

ரா-கல்யாண் நாயகி! நின்உபசரணைக்காக மகிழ்கின்றேன். என்னருமைத் தங்கையாகிய நல்லதங்காள் இங்கு வந்தனளே எங்கே?

இராகம்-வசந்தா-தாளம்-இந்துஸ்தான்-சாப்பு.

பல்லவி.

எங்கே எங்கே எங்கே
இங்குவந்த தங்கை (எங்கே)

அநுபல்லவி.

மங்கியேமுகங்கருகிப் பொங்கியேகண்ணீர்பெருகி
மக்களொடு மிக்கவிசனிக்க இங்கு வந்ததங்கை (எங்)

சரணங்கள்.

மிஞ்சியபஞ்சத்தாலே கொஞ்சுங்குழந்தைகளுடன்
தஞ்சமென்று நெஞ்சுருகிப் பஞ்சையாக வந்ததங்கை (எங்)

ஹே பிராணகாந்தி! யான் கானகத்தில் வேட்டையாடும் தருணம் என் அருமைத் தங்கையானவள், ஏழுபிள்ளைகளுடன் இம் மதுரையடைய வழிதெரியாது மயங்கினள். யான் கண்டு, சிவிகை மீதிலேற்றி யனுப்பினேன். அந்தக் குழந்தைகளி லொருவரையும் காணேம். என் சகோதரியையும் காணேம். எங்கே?

மூ—ஹே! ப்ராணநாதா! தாங்கள் காட்டில் கண்டனுப்பிய என் அருமை நாத்தியார் க்ஷேமமோடு வந்து சேர்ந்தனள்.

நடந்ததென்ன சொல்லம்மா என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரிகை-தாளம்-ஆதி.

பல்லவி.

செப்புவேன் மணவாளா இந்த
ஜெகம்புகழென் தோளா (செப்)

அநுபல்லவி.

ஒப்புடன் இங்குவந்த உத்தமநாத்தியரை
உபசரித்திட்டவிதம் ஒழுங்குடனே அடியாள் (செப்)

சரணங்கள்.

வந்தவென்னாத்திக்கு வரிசைமிகவேசெய்து
வாரிமைந்தரைக்கையா லெடுத்தேன்
அந்தம்பெருகவேநீ ராட்டியுடையுடுத்தி
ஆவலுடனேமுத்தங் கொடுத்தேன் (செப்)

அதிரசவர்க்கமொடும் அன்னமளித்துநீங்கள்
அருந்துங்களென்றுமுப சரித்தேன்
நிதியிலிசைத்தபணி பட்டுப்பட்டாடைமுதல்
நேர்த்தியுடனவர்க்குத் தரித்தேன் (செப்)

பஞ்சணைமீதினிலே பாலரொழுவருடன்
படுத்திடச்செய்து இரு புறமாய்
வஞ்சியர்தாராட்ட வண்ணக்கவரிவீச
வைத்திருந்தேன் வெகு திறமாய் (செப்)

ரா—ஆஹா! பிராணசகி! இவ்வளவு விசேஷமான உபசாரணை செய்தனையா வென்ன? நீ மிக்க நல்லவள்தான்! ஆனல்!

11410

மூ— ஆம் பிரபூ! என்ன தங்களிடம் பொய்கூடச் சொல்லு துண்டோ நான்? முழுதுந்தான் கேளுங்களேன்!

ரா—சபாஷ் நாயகி! அப்பால்?

மூ— ஓங்குமேன்மாடியில் உள்ளேசப்ரமஞ்சத்தில்
உயர்வுடன்யான் பள்ளி கொண்டேன்
பாங்குடனெழுந்துற்றுப் பார்க்காத்தியைக்காணேன்
பாவிதுயர்மிகுத்து நின்றேன் (செப்)

ரா— ஆஹா! சபாஷ்! என்ன ஜாலம்! எவ்வளவு சம்ப்ரதாயமாய்ப் பேசுகிருய்? !எவனே ஆற்றில் நடந்து போம்பொழுதே "மீன் பிடித்தேனென்ருனும், தகப்பன் எங்கேயடா என்ருல் சுட்டுத் தின்றுவிட்டேன்" என்ருனும். அதுபோல் சங்கதி சொல்ல வந்தாய்! ஹேபெண்ணே! உள்ளது சொல்கின்றனையா என்ன?

மூ— தோழிகாள்! என்னவிந்தை பார்த்தீர்களா! ஐயோ ஈதென்ன அநியாயம்? அங்கிருந்துவந்த நல்லதங்காளுக்கும், அவளு டைய பிள்ளைகள் எழுபேர்களுக்கும் நான் எவ்வளவோ பணி விடைகள் செய்து, உபசரித்து, அன்னமளித்து, ஆதரித்து வந்தது உங்களுக்குத் தெரியவருமே! ஐயோ பாவியாகிய நான் யாருக்கு என்ன விதமாய்ச் செய்தபோதிலும் 'இல்லை' என்றே போகுதே! இதற்கென் செய்வேனடி தோழிகாள்!

ரா:—

கலித்துறை.

வஞ்சகன் தானே திரண்டொரு ரூபம தாகிவந்த
பஞ்சையே நீயவட் கிவ்வித மாகப் பணித்திருந்தால்
மஞ்சணி கூந்தல் படைத்தவென் தங்கையிம் மாடிவிட்டுக்
கொஞ்சிடு சேய்களைக் கூட்டியே போவளோ கூறுவையே

ஐமுலகுதாகு என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-காப்பி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கள்ளியேயிங்குற்ற நல்லதங்காள்
எங்கே எங்கே எங்கே
உள்ளபடி விள்ளுவாய் நீ

ஓட்டிவிட்டு ஜாலங் காட்டுகிறாய்
இங்கே இங்கே இங்கே
வந்தஎன் தங்கைக்கு நீயே-பெரு
வஞ்சகஞ்செய்தனை நாயே-உன்
தந்துரோக அறிவேண்டி பேயே நீ
தன்மையாய்ப்பேசுவர் தாயே-அடி
தள்ளுவாய் செல்லுவாய்
தக்கசிட்சையுனக் கிக்கணஞ்செய்குவேன் (கள்)

காதகஞ்செய்த சண் டாளியே-நீ
பாதகத்தி லாவாய் மூளியே
கதியேது மடையாது புவிமீது இப்போது
கதறவே பதறவே
கண்டிப்பே னுண்மையை விண்டிடு வாயடி (கள்)

அடி மூர்க்கை! நீ யாரிடத்தில் ஏமாற்றப்படித்தாய்! உள்ளது சொல்லுவாயா அல்லது உன்னை இந்தக் கட்காயுதத்தால் இரு துண்டாய் வெட்டவா? உன்னைப் பலகூறாய் வெட்டினாலும் வஞ்சகமே குடிகொண் டிருக்குமன்றி வேறன்று.

[அலங்காரி கண்ணீர்விட்டு அழு
வதுபோல் பாசாங்கு காட்டி.]

கானகத்தில் நானலைந்து என்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தோதகம் நம் சோதரிக்குத் தொல்புவியிற் செய்திருந்தால்
பாதகத்திற்போவேனிந்தப் பாரறியகாரியானும் (தோ)

ஏனோஇந்தப்பழியென்மீது இயம்புகிறீர் எந்தன்கோவே
நானோஒன்றுஞ்செய்தறியேன் நம்பினோர்க்கினல்குறியேன் (தோ)
கொற்றவரேஇங்கென்மீது கோபமேனோகொள்ளுகிறீர்
உற்றதுசொன்னே னுந்தங்கைக் கொருகுறைவுஞ்செய்ததில்லை. (தோ)

நல்:—ஆகா! வாஸ்தவமாகத் தானிருக்கவேண்டும். நமக்கிது என்ன புத்தி? நான் வீணாய் என் பாரியைக் கோபித்துக்கொண்டேன். பால்யத்தில் என் தங்கையோடு பள்ளிக்கூடத்திற் படித்த பெண்குழந்தைகளெல்லாம் இங்கிருப்பது பற்றி, அங்குதான் சென்றிருக்கவேண்டும். ஆனால் போய்ப் பார்த்து வருவோம்.

[நல்லண்ணன் நல்லதங்காளைத் தேடி, வீதியினிடமாகப் போகும் போது வீதியிலுள்ளவர்களைப்பார்த்துக் கேட்கிறான்]

மாதவமே இவ்வுருவாய் என்ற வர்ணமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வாழ்வுமிகுமாதர்களே வான் கலையறிந்தோர்களே
ஏழுபிள்ளை நல்லதங்காள் இங்குவரக்காணீர்களோ
பாவியமென் தங்கையோடு பாடசாலைசென்றவரே
தாலமிசைகாணீர்களோ தனையரோடென் தங்கைதனை (வா)

ஹே மாதர்காள்! பால்யத்தில் என் தங்கையோடு நீங்கள் பள்ளியில்சென்று, படித்துவந்ததுபற்றி உங்களைக் கேட்கலானேன். என் தங்கை குலசேகரியைப் பார்த்தீர்களா?

அய—அரசே! நல்லதங்காள் வந்திருக்கின்றனளா? சுகமாய் வந்திருக்காளா? ஐயோ! குலசேகரி என்னை மறந்துவிட்டாள். இங்குவரவில்லை பிரபூ! கட்டாயம் ஞானசுந்தரி பார்க்கவேண்டுமென்று ஆவலாயிருப்பதாய்த் தெரிவியுங்கள். நான் தங்களரண்மனைக்கு இன்னுஞ் சில பால்ய சிநேகிதர்களை எல்லாங் கூட்டிக்கொண்டு அங்கு வந்து கண்டு கொள்கிறேன்,

நல்—ஆனல் இங்கு வரவில்லையோ?

அய—வரவில்லை அரசே!

ஆ! குலசேகரி! இன்னுமெங்கு தேடுவேன். ஒருவேளை என் பாரியாகிய அந்தச் சண்டாளி என்ன விதமான கொடுமை செய்தனளோ தெரிகிலேன். ஆஹா! இருக்கட்டும். ஆரண்யமார்க்கமாய்ச்சென்று பார்ப்போம். அங்குதான் சென்றிருக்க வேண்டும்.

[காட்டு மார்க்கமாகச் செல்லும் பாதையை நோக்கிப்போகின்ருன்.]

பாசுபதம்போல மதன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

இங்குவந்த எந்தன் தங்கை
எங்குசென்றனளோ அவ
ளென்கிலைந்தனளோ—ஒரு
ஏழை போலலே யாமலேமனை
வாழவந்தனளே பஞ்சத்தால்
தாழநொந்தனளே (இங்)

உற்றபொருளென்னசெய்தார்
உந்தன் அன்பனுமே—என்
சொந்த நண்பனுமே—பெற்ற
எழுபிள்ளைகள் சூழவந்திவண்
வாழவந்தனையோ ஐயோமனந்
தாழநொந்தனையோ (இங்)

[நல்லண்ணன் ஆரண்யமார்க்கமாய்ச் செல்லுங்கால் ஆபரணங்களைக்கண்டு ஆலோசிக்கின்ருன்.

ஆஹா! இதென்ன நமது தங்கை அணிந்திருந்த ஆபரணங்களிங்கு கிடக்கின்றன. என்னகாரணம்? ஐயோ வரிசையாகவே

கீழே விழுந்து கிடக்கின்றதே! ஒரு வேளை அடையாளத்திற்குத் தான் போட்டுக்கொண்டு போயிருப்பாளோ! நல்லது சென்று பார்ப்போம். சிறிது வேகமாய்ச் சென்றால் கண்டுகொள்ளலாம்.

ஆதிசிவசங்கரனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-சேஞ்சுருட்டி-தாளம்-திரிபுடை.

என்னுடன்பிறந்ததங்காய் எங்குநீசென்றாயோதங்காய்
ஏதுசெய்வேனினியான் தானே பாவியானேனே (என்)

பன்னிரண்டுவருடமதாய் பாரினில் மழையிலாது
பஞ்சையாகிவந்திரையையோ இதுவினையோ (என்)

சதிகாரிசெய்தகொடுமை சகிக்கமுடிந்திடாது
தனயருடனேவந்தாயோ மனம்நொந்தாயோ (என்)

அடவிதனிலேஎங்கு அலைந்தாயோயானிங்கு
அறியேனேனதுபின்னையே காணேனுன்னையே (என்)

ஆ! சகோதரி! இங்கு கொடிய சிங்கம்யானை முதலிய மிருகஜாதிகள் மிகுந்து வாழ்வதால் ,அதினாலேதும் கஷ்டமடைந்திருப்பையோ தெரிந்திலேன்! ஐயோ அந்த மூளிஅலங்காரி உன்னைக் கொடுமை செய்திருப்பாளென்று நிச்சயமாய்எண்ணினேன். இல்லாவிடில் இந்த ஆரணியத்திலே ஆபரணங்களைக் கழற்றி அடையாளமாய்ப் போட்டுக்கொண்டு, பசியால் வருந்திய பசுங்குழந்தைகளாகிய பாலர்களையுங் கூட்டிச் செல்லமாட்டாயே!

எந்தன் தவத்துதித்த பாலரே என்ற வர்ணமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எந்தன் தங்கையேஎங்கு சென்றாயோ-வழி
ஏதுமறியாமலே நின்றாயோ
உந்தனையிங்குதேடி வந்தேனே-நான்
ஓங்கித்துயர்மிகுந்து நொந்தேனே

பஞ்சம்பிழைக்கவந்த சோதரியே-அந்தப்
பாவிமூளிசெய்ததை யானறியேன்
மஞ்சுமிகுமிருக ஜாதிகளே-ஒரு
மாதிங்குவந்தாளோ சொல்வீர்களே
ஏழுபிள்ளைகளுடன் வந்தாளிங்கு-நீர்
எங்குங்கண்டதுண்டானல் சொல்வீரிங்கு
தாளாக்கோபத்துடனே உற்றுரையோ-இந்தத்
தார்வனந்தனில்வாப் பெற்றுரையோ

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

தேடித்தேடி என் தங்கை யைக்காணேனே
ஏதேதோ சித்தம் வாடினேனே-நான்
காணமலென்சித்தம் வாடினேனே-தங்கையைக்
காணமலென்சித்தம் வாடினேனே-நான் (தே)

பூணாம் தங்கைக்குப் பூட்டுவேனே-நான்
பொங்கியுள்ளன்புபா ராட்டுவேனே
பூமி புகழ்ந்திடு மாமுத்து
சாமிக்குள் ளேகற்ற சீர்பெற்ற நல்லண்ணன்
மாடமணி மேடையி லேறியிறங்கினுள்
ஏழுகுழந்தையுந் தானுமாய்
எங்கெங்குசென்றனளோ நான் (தேடி)

ஆஹா மிருகஜாதிகாள்! என் தங்கை ஏழுபிள்ளைகளுடன் இங்கு வந்ததுண்டோ? ஐயோ பார்த்திருந்தால் சொல்லுங்கள். என்னேடு பேசாது விலகுகின்றீர்களா? இது உங்களுக்குத் தருமமா? நல்லது அதோ ஆயர்குலப் பாலர்கள் மாடுமேய்த்துக் கொண்டிருக்கின்றனர். அங்குசென்று கேட்போம்.

ஹே அண்டர்குலப் பாலர்காள்! இங்கொருபெண் ஏழு பிள்ளைகளுடன் வந்திருப்பாளோ? நீங்கள் பார்த்ததுண்டோ! சொல்லுங்கள்.

கோ—ஆம்! மகாராஜ்! இங்குவந்து "தண்ணீருந்தக் கிணறிருக்கும் இடமெது" வெனக்கேட்டார்கள். நாங்கள் 'பசும்பால் கறந்து தாரோம்' என்று சொன்னோம். 'பால் குடிப்பதில்லை' என்று சொன்னார்கள். அதோ அந்த மேற்பாகத்தி லிருக்கும் கிணற்றில் தண்ணீர் அருந்திக்கொண்டிருக்கக்கூடும். போய்ப் பாருங்கள். மகாராஜ்! சீக்கிரம் போனால் கண்டு கொள்ளலாம்.

தக்கபாராங்கல்லைத்தூக்கி என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

என்பிறவிநல்ல தங்கா புலி
ஏற்றகற்பாசி நங்கா
துன்பத் தழுந்தி நொந்தாயே இங்கு
சுகமுற வேசீவந் தாயே (என்)

பாழும் பஞ்சமுற்ற தாலே பசி
பட்டினியோடுமிக் காலே
ஏழுபிள்ளைகளைக் கூட்டி வந்த
ஏந்திழையான சீ மாட்டி (என்)

சஞ்சலம்நீயுறப் படுமா எனக்குச்
சற்றும்மனம்சகித் திடுமா
கொஞ்சும்பிள்ளைகளைக் கூட்டி வந்த
கோமளமானசீ மாட்டி (என்)

சண்டாளமூளியின் கொடுமை அதைச்
சாற்றுதற்கேமெத்தக் கடுமை
திண்டாடவிட்டனள் பாவி அவளைச்
சித்ரவதை செய்வேன் மேவி. (என்)

வாவென்றுனை அழைக்காதே அந்த
மட்டிச்சிறுக்கிசெய் சூதே
நீவெறுத் தாரண்ய மடுத்தாய் என்மேல்
நீடியபாசத்தை விடுத்தாய் (என்)

[நல்லண்ணன் கிணற்றருகில் செல்லுங்கால் தாலிமுதலிய ஆபரணங்களைக் கண்டு வருந்துகிறான்.]

இராகம்-தேசிக-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆபரணங்கள் கண்டேன் நான்
அளவில்லாத்துயரங் கொண்டேன் (ஆ)

அநுபல்லவி.

பாவமொன்றுமறியாவிற் பன்னியாம்நல்லதங்கைக்குக்
கோபமோ மனஸ்தாபமோ எவர் சாபமோ நான் (ஆ)

சரணங்கள்.

நஞ்சைபுஞ்சைகள்சேர நல்லவயல்தன்னைச்சார
சஞ்சாரமில்லாதகாட்டில் சரிந்தகிணற்றுமேட்டில்
வஞ்சிபுனையும் மிஞ்சியுந்தாலி யுஞ்சாடுமாய் (ஆ)

வந்தவள் தனையென்தேவி நொந்தததினலேமேவி
இந்தக்கிணற்றினில்வீழ்ந்தி றந்திருக்கத்தான்வேணும்
பந்தபாசத்தால் சிந்தைநோகுதே
அந்தோஎன் செய்வேன் (ஆ)

ஆஹா! என்ன காலம்! இங்கு தாமரையின் மீது தன்னுடைய மாங்கல்யத்தையும், இன்னுஞ்சில ஆபரணங்களையும் கழற்றி வைத்திருக்கின்றனள். என் சகோதரியையும், குழந்தையையுங் காணேம். இங்குதான் அவர்களிருக்கவேண்டும், கூப்பிட்டும் பதில் சத்தமில்லை. வேறெங்கு சென்றிருப்பாள்? நல்லது ஒருவேளை கிணற்றில் தண்ணீ ருருந்துகின்றனரோ! பார்க்கிறேன்.

[நல்லண்ணராஜன் கிணற்றை எட்டிப் பார்க்கிருன். அங்குஇறந்துகிடக்கும் தங்கையையும், பிள்ளைகளையும்பார்த்து மனம்வருந்துகிருன்.]

விருத்தம்.

என்னுடன் பிறந்த தங்காய் ஏதடி இந்தக் கோபம்
இன்னெடு உலகத்தாசை இற்றதோ அற்றுப்போச்சோ
மன்னிய பாலரோடு மாவனந் தன்னிலுற்றாய்
துன்னிய கிணற்றில்வீழத் துணிந்திட்டாய்மடிந்திட்டாயே

பட்டாபிஷேகம் படைத்திந்த என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வேட்டைகளாடிய வேளையிலுங்களைக்
காட்டினிற்கண்டு கலங்கிமது
வீட்டுக்குப் போங்களென எனது
நாட்டிற்கனுப்பினனே தங்காய்
மேவியிந்தப் பாவியைநீ பார்க்கப்படாதென்னவோ அம்
மேலுலக மடைந்தாய்.

சண்டாளிமெத்தச் சதிகாரியான என்
பெண்டாட்டிசெய்த பெருமோசத்தாலோநீ
வண்டாரடவியுற்றாய் பாலரோடு
துண்டாய்மடியவுற்றாய் உற்ற
சோதரியானேதுசெய்வேன் பாதகனாய்ப் பேனேனையோ
தொல்லுலகந்தனிலே.

பஞ்சந்தெளிந்த உடன்பதிபோவோமென்
றஞ்சாதுநீங்க ளடவியிலேயோ
மஞ்சுடன் வந்தீர்களே இங்குவந்து
துஞ்சிடலானீர்களே அம்மா
இப்படியும் ஒப்பிவாமுற்பிறப்பின் கற்பனையோ
எப்போதுமைக் காணுவேன்.

கூட்டத்தோடுந்தன் குழந்தைகளையும்வின்
னாட்டிற்குவாவென நாணயமாகக்
கூட்டியே சென்றாயோநீ பழவினை
ஓட்டியேநின்றாயோநீ உன்
நாயகனுக் கேதுசொல்வேன் ஞாயமோசொல் மேதினியில்
நானென்ன செய்வேனையோ.

கோபமோ என்மீது கோகனகியான்செய்
பாபமோ ஆ இந்தப் பாழுங்கிணற்றினில்
தாவியேமாண்டுவிட்டீர் உடனே யம்
மேவுலகாண்டுவிட்டீர் அம்மா
எந்தன்சொல்லு முந்தன்செவி ஏறலையோ ஏதிங்கையோ
என்னேடு பேசாயோ நீ.

ஆ தங்காய் என்னை விட்டுவிட்டு உன்மக்களோடு பரலோக மடைந்தனையோ! ஆஹா நீ ஏழு பிள்ளைகளையும் இக்கிணற்றில் தள்ளி மடியும்படியாய் அந்தக் கொடியபாவியாகிய "அலங்காரி" என்ன கொடுமை செய்தனளோ? ஆஹா உன்னை அருமையாய் மணம்முடித்த காசிபன் வந்து "என் தேவியும், பிள்ளைகளும் எங்கே" என்று கேட்டால் நான் என்னசொல்லுவேன்? ஐயோ கானகத்தில் வேட்டையாடும் தருணம் உன்னைக்கண்டு வீட்டிற்குப் போகும்படி அனுப்பினேன். ஆஹா அத்தருணம் "நான் மட்டிலும் போகமாட்டேன்" என்று நீ சொன்னதைக்கூட நான் கேட்கவில்லையே! ஐயோ குலசேகரி! உன்னுடன் இக்கிணற்றில் நானும் விழுந்து மடிவேன்; ஆனல் அந்தச் சண்டாளியாகிய அலங்காரியையும், அவளுடைய பந்துக்களையும் அடியோடு மடித்துவிட முடியாதே! ஆனதுபற்றி அன்னவர்களைத் தக்கவாறு தண்டித்துப் பின்னர் நானும் உன்னேடு மாளுகிறேன். இது சத்தியம்!

அப்பா கோபாலர்களே! இந்தக்கிணற்றில் இறங்கி, இவர்களை எடுத்துக் கரைசேர்த்து விடுவீர்கள்.

கோ—மகராஜ்! அப்படியே செய்கிறோம். ஐயோ அம்மணீ! நீங்களிந்த விதமாய் மாளுவீர்களென்று தெரிந்தால், நாங்கள் கிணறிருக்குமிடம்சொல்லவேமாட்டோம்; ஐயோ! ஆவின்பாலீய "வேண்டாம்" என்று சொல்லி, மடியவா வந்தீர்கள்?

[கோபாலர்கள் கிணற்றிலிறங்கி, நல்லதங்காளையும், பிள்ளைகளையும் கரையேற்றி விடுகிறார்கள்.]

———

கோ—மகாராஜ்! எட்டுப் பேர்களையும் வரிசையாக இதோ கரை யிலேற்றி விட்டோம். என்ன செய்ய வேண்டும்? செப்புவீர்.

ரா—பாலர்களே! என் தங்கையையும், குழந்தைகளையும் எடுத்து நல்லடக்கம் செய்து விடுவோம் வாருங்கள்!

கோ—மகாராஜ்! செப்பியபடியே ஒப்புடன் செய்வோம்.

ரா—பாலர்களே! நல்லடக்கம் செய்தாய்விட்டது. இச்சங்கதியை, நமது நாட்டில் ஒருவருக்கும் சொல்லாதீர்கள். அதோ ஆபா ணங்க ளிருக்கின்றன. அதை எடுத்துக்கொள்வீர்கள்.

கோ—அரசே! ஆபரணங்கள் எங்கே கிடக்கின்றன! வெறுங் கல்லாய்க் கிடக்கின்றதே தவிர ஆபரணங்களைக் காணோமே?

ரா—ஆ இது வென்ன ஆச்சரியம்! நமது கண்ணுக்கன்றி மற்றவ ருக்குக் கல்லாகத் தோணும்படி சபித்தனள் போலும்! நல்ல திருக் கட்டும்; நாம் சென்று, நமது வேலையை முடிப்போம்.

[நல்லண்ணன் வீட்டிற்கு வந்து, அலங்காரியோடு மே லுக்கு மட்டும் சந்தோஷம் பாராட்டிப் பேசுகிறான்.]

ரா—ஹே ப்ராணகாந்தி! நான் என் தங்கையைப் போய்த் தேடி னேன். என் கண்ணுக்கு அவள் தட்டுப் படவில்லை. 'போனு லென்ன வருவாள்' என்று வந்து விட்டேன். நிற்க "நீ இவ்வளவு உபசாரணை செய்தும், சொல்லாது போய் விட்டனளே" என்ற வருத்தம் உனக்கிருப்பது போலவே எனக்கும் இருக்கிறது.

மூ—ஆ! ஆ! ப்ராணநாதா! பார்த்தீர்களா! நான்முன்னமே சொன்ன தற்கு நம்பாது என்னை வீணுகக் கோபித்துக் கொண்டீர்கள். மேலும் நான் அவர்களுக்குச் செய்தேனே, செய்யவில்லையோ! அதை இந்நாட்டாரைக் கேட்டாலும் சொல்வார்கள். என்னி டத்தில் வஞ்சகம் கிஞ்சிற்றுமில்லை. அவள் வீட்டுக்கு வந்த உடன் நான் செய்த மரியாதையைப் போல் யாருஞ்செய்திருக்க மாட்டார்கள். எப்போ நமது வீட்டுக்கு அவள் வந்த பிறகு சொல்லாமல் ஓடினளோ, அப்பவே அவள் யோக்கியதை எனக் குத் தெரியவந்தது "உடன் பிறந்த அண்ணன்" எனக்கிஞ்சிற் றும் மதியாமல் நமது வீட்டிலிருந்த ஆபாணங்களை யெல்லாம் கவர்ந்து கொண்டு ஓடினளே! அவளைத்தேடி நீங்கள் செல்ல லாமா? ப்ராணநாதா! [கன்னத்திலடிக்கிருள்]

ரா—ப்ராணகாந்தி! அவள் போனல் போகட்டும், அந்த நகை யோடு அவள் தொலைந்து போகிருள். நீ உன்னிடமிருந்த நகை களை எல்லாம் அவளிடம் கொடுத்தது உன்மேல் பிசகு. மேலும் அவள் "திருடி" என்று எப்போது உனக்குத் தெரிந் ததோ அப்போதே அவளைத் தாக்கிவிட வேண்டியது நின் கடமையல்லவா! நீ வஞ்சகமிலாது "நமது நாதனேடு பிறந்த தங்கை" என்னும் பந்தத்தால் அறுசுவையோடு அன்ன மளித்து, மஞ்சத்திற் படுக்கவைத்து, நீ மாடியிற் சென்று படுத்து விட்டனைபோலும்! அவள் சமயம் பார்த்துக் "கிடைத் தது மிச்சம்" என்று நகைகளைத் திருடிக்கொண்டு ஓடிப்போய் விட்டாள். தருமஸ்திரீ என்பவள் நீதான்.

மூ—ஐயோ நாதா! எனக்கவ்வளவு தெரிந்தால் நான் என் எனது ஆபரணங்களைப் பறிகொடுத்து நிற்கின்றேன்? என்னை 'வினய மற்றவள் வினயமற்றவள்' என்றே என் தாயாரும், தகப்பனு ரும் அடிக்கொரு தடவை சொல்லுவார்கள். அது சரியாயிருக் கின்றது. இன்னும் எனது எண்ணம் நமது வீட்டுக்கு யார் வந்தார்களோ, அவர்களுக்குத் தக்கபடி செய்யவும் வைக் கவுமே வருமொழிய, ஒருவரைப்போல் இவ்வளவு அவ்வளவு வைக்க எனக்குத் தெரியாது. அந்தப் படிப்பு நான் படிக் கவே இல்லை. நான் "தரும ஸ்திரீ என்றும், அல்லது கரும ஸ்திரீ" என்றும் தெரியவென்ருல், இந்நாடே சொல்லும். தாங்கள் கிராமப்பசி வருத்தத்தோ டிருக்கிறீர்களே! சமை

யல் ஆனது. சாப்பிடவாருங்கள். அவள் கிடக்கிறாள், அவள் முகத்திலேயே இனி விழிக்கக்கூடாது.

ரா—ப்ராணசகி! என்னென்ன ஆபரணங்களைக் காணோம்? அதைச் செப்புவாயாகில் உடனே செய்ய உத்தாவளித்துவிடுகிறேன். நீ சஞ்சலத்தை விட்டுவிடு. நீ சஞ்சலப்படுவது எனக்கு மனஞ் சகிக்கவில்லை; ஒவ்வொன்றாய்ச் சொல்லிவா பார்க்கலாம்.

நடந்ததென்ன சொல்லம்மா என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கேட்டு வருவீர்நாதா எந்தன்
கெண்ணியரே நீதா (கே)

அநுபல்லவி.

வீட்டிற்கு வந்தவெள் ளாட்டி நல்லதங்காள்
விகசிதநடத்தையை நானே
நாட்டினிலெடுத்தின்று ஏட்டினிலெழுத்தைப்போல்
நவிலுவேன் விவரமாய்த் தானே (கே)

சரணம்.

மைந்த ரெழுவருடன் வந்தநம் தங்கைக்கு
வரிசைமிகமிகவே செய்தேன்
தொந்தம்பாராட்டியல்லோ சொந்தநகையிற்பல
தோணபடி யளித்து னைகதேன் (கே)

தங்கச் சாப்பணியும் செங்கை விரலணியும்
தாவடமுங் கொலுசுங் காணோம்
துங்கமிகுமன்றும் தங்கைநினைத்துவந்த
தோதகமறியாது போனோம் (கே)

பாரிற்கதிர்மிகுத்து யாரும்விலைமதிக்காப்
பாடகப்பதக்கமும் போச்சு
நாரிநந்தங்கையிங்கு சாரிவந்ததாலத்தோ
நஷ்டமிக அடைய லாச்சு (கே)

ஹே! பிராணநாதா! எனக்குத் தெரிந்தமட்டிலும் இவ்வளவு ஆபரணங்களையும் காணேம். இவள் எண்ணிவந்த எண்ணத்தை யான் முன்னமே தெரிந்திருப்பேனே யாகில் அவளை வீட்டினுள் நுழையவிடமாட்டேன். வஞ்சகமென்பது இன்னது என்றறியாத வளாகையால்,"நமது நாதனேடு பிறந்த தங்கை"என்று எண்ணி, நான் தூங்கிவிட்டேன். ஐயோ எனக்கு அவ்வளவு தெரிந்தால் நான் ஏன் இவ்விதமாய் இருக்கின்றேன்? நாதா!

ரா:—ப்ராண காந்தி! நீ ஏன் விசனிக்கிருய்? போனுற் போகட்டும். அதற்குப் பதில் செய்ய நான் காத்துக்கொண்டிருக்கிறேன்.

மூ:—நாதா! உங்களுடைய பந்துக்களை நான் நம்பவே மாட்டேன்.

முதலில்லாவியாபாரக்காரன் என்ற வர்ணமெட்டு.

ரா:—அழகுள்ள அலங்காரியென் மாதே-நம
தாவிக்குமாரனுக்கிப் போதே-கலி
யாணஞ்செய்து காணத் தானே-நனி
யாவல்கொண்டேனடி தேனே-சிறப்
பாகப்பெண் பார்த்திடப் போக வேண்டுமுண்டோ
ஆட்சேபனை மடமானே (அழ)

ப்ராணசகி! என்ன யோசனே? உலகம் "இன்றிருந்தால் நாளை இல்லை" என்னும் வார்த்தையைக் கொண்டிருப்பதால் நமது மக னுக்கு "விவாகஞ்செய்து, ஸிம்மாசனத்தில் வைத்துக் கண்குளிரப் பார்க்கவேண்டும்" என எண்ணமுற்றேன்! உனதெண்ணம் யாது?

மூ—எனக் காட்சேபனைகிடை யாதே-என்
அபிப்பிராயமுமிங் கீதே-இதில்
ஆனல்நம்முடைய எண்ணம்-போ
லாகவேநடக்குந் திண்ணம்-நம
தருமைப் புத்திரனுக்கும் பெருமையினிப் பிறக்கும்
ஆருமே புகழும் வண்ணம் (என)

ப்ராணபதி! என்ன தடை? அப்படியே செய்து விடுகிறது? எனக்கு அது முன்னமே எண்ணம். நீங்களே சொல்லிவிட்டீர்கள்!

ரா—ஒரு—வண்ணமருமகளைத் தேட- நம்
மகனுக்கதில் மனது நாட-அவன்
வடிவைப்படத்தினிலே வரைந்து-எந்த

மாதுபொருத்தமெனத் தெரிந்து-கொண்டு
வாரேன் இன்றேபயணம் போரேன் வந்தவர்க்கனம்
வழங்குவை இங்கு நீ இருந்து (ஒரு)

கண்மணி! அப்படியானல் நமது குமாரனைப்போல் படம் வரைந்து ஐம்பத்தைந்து தேசத்தாசர்களுக்கும் அனுப்பி, நமது பாலகனுக்குகந்த அழகுடைய பெண்ணை அல்லவா பார்க்க வேண்டும்? அதற்கு நான் தான் போகவேண்டி வருகிறது!

பூ—நீர்—இருந்திருந்திந்த வார்த்தை சொன்னீர்-இதை
எண்ணப்பெருகுதே என் கண்ணீர்-பேஷ்
எங்களையும் மறக்க லாமா-வே
றினத்திற் சம்பந்தம் பண்ணப்போமா-உமக்
கேனே இதினிலின்பந் தானே எங்கள்குடும்பம்
ஏழைக்குடும்ப மல்லோ பூமா (நீ)

ஆ! நாதா என்ன? எங்கள் தகப்பனர் வீட்டுச் சம்மந்தத்தை மறந்து விட்டீர்களாவென்ன? உங்களுக்கேன் ஞாபக மிருக்கின்றது? சமயத்திற்குத்தான் பந்துக்கள், அப்பால் வேண்டுவதில்லை போலும்? சரிதான் அந்தத் திருடிகூடப் பிறந்தவர்தானே நீரும்?

நல்—என்—பூமான் மகளே மனஸ் தாபம்-வேண்டாம்
புகல்நின் விருப்பமேனிக் கோபம்-இளம்
பொற்கொடியேநினக்கு மாருய்-எதும்
புரிந்தேனே இதுவரை கூருய்-நின்
பொருந்துமினத்தர்களை மறந்ததுவுமேயில்லை
புனிதவநிதையை கூராய் (என்)

பிராணசகி! என்ன காரணம்? ஏன் விசனிக்கின்றனை? யான் ஒருக்காலும் உனது பந்துக்களை மறக்கவுமில்லையே!

பூ—மிகு—கூரார்வடிவழகி அவளே-என்
கூடப்பிறந்த தம்பி மகளே-நம்
குழந்தைக்குத் தக்க ஒரு ஜோடு-நல்ல
குணவதியவட் கில்லையீடு-சிறு
கோமளரூபவல்லி நேமமிகுந்தமெல்லி
கூறிலவளே அன்னப் பேடு (மிகு)

ஆ நாதா! என்னுடன் பிறந்த தம்பியாகிய கேகயராஜனுக்கு அருமையான பெண்குழந்தை ஒன்றிருக்கிறது. அவளுடைய பெயர் காமசுந்தரி'' அக்குழந்தையை நமது ''பாலனுக்கே மண முடிக்க வேண்டும்'' என்பது என் கருத்து. அப்படியிருக்க நீங்கள் ஏன் பிறத்தியில் பெண் பார்க்க வேண்டும்?

பிராணநாயகி அப்படியா! மிகுந்த சந்தோஷம். ஆனல் நான் ஐம்பத்தைந்து தேசத்தரசர்களுக்கும் நிருபமெழுதித் தருவிக்கின்றேன். நீ உந்தன் தேசத்து உன் தந்தைக்கும், தம்பிக்கும் இன்னுமுள்ள பந்துக்களுக்கும் கடிதமெழுதுவாயாக.

மூ—பிராணநாதா! உத்திரவின்படியே.

ரா—மந்திரி! நமது மைந்தனுன சந்திரஹாசனுக்குத் திருமணஞ் சூட்டுவதாய் நிருபமெழுதி, ஐம்பத்தைந்து தேசத்தரசர்களையும் வரவழைப்பாய். நிற்க நமது பந்துக்களுக்கு நல்லதங்காளும், பிள்ளைகளும் இறந்துபோனதாய், நிருபமெழுதித் தருவிப்பாய். மற்றவை சமயோசிதப்படி ஆலோசித்துக்கொள்வோம்.

[சகலரும் வந்தார்கள் அலங்காரியின் தம்பியாகிய கேகயராஜன் அலங்காரியை வணங்குகின்றான்.]

வந்தனமிகத்தந்தனம் என்ற வர்ணமெட்டு.

இராகம்இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சோதரியான் வந்தனம் நீதமோடு தந்தனம்
தொந்தமாக எந்தனேடு கந்துவந்து நித்தனன் (சோ)

கே—சோதரி! நமஸ்கரிக்கின்றேன்.

மூ—கல்யாண் தம்பி! வருவாயாக; காமசுந்தரி அருகில்வா! வாருங்கள் அத்தான் வாருங்கள். அத்தை வாருங்கள்.

மூ—ப்ராணநாதா! நமது பந்துக்களெல்லாம் வந்து விட்டார்கள். விவாகம் நடத்த இன்னும் தாமதமேன்?

நல்—ப்ராணசகி! சற்றுநேரம் பொறுப்பாய்! இதோ ஆய்விட்டது. மந்திரி! தேர்ந்த சிற்பசாஸ்திரி ஒருவனை அழைப்பாய்.

சிற்—மகாராஜ்! வந்தனம் செய்கிறேன்.

நல்—கல்யாண்! சிற்பசாஸ்திரி! உன்னதமான ஒரு மண்படமுண்டு படுத்தி, அதில் சூஸ்திரப்பந்தலிட்டு, அதிலுள்ள யாவர்களும் மடியும்படியாய்த் தந்திரமான கட்டிடம் ஒன்றுகட்டுவாயாக.

சிற்—ப்பூ! "அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகள்" என்ற முதுமொழிக்கிணங்கச் சூஸ்திரமண்டபம் கட்டி விட்டேன்.

நல்—சிற்ப! வெகுமதி யனேகம் பெற்றுக்கொண்டு செல்வாயாக. வேதியரை அழைப்பியுங்கள்.

வே—மகராஜ்! என்ன காரணம் அழைப்பித்தது?

நல்—வந்தனம் சற்குருவே!

வே—ஆசிர்வாதம்.

நல்—என்னுடைய குமாரனுகிய சந்திரகாசனுக்கு விவாகம் நடத்துவதாய் எத்தனம் பண்ணியிருக்கிறோம். என்று நல்லநாள் பார்த்துச் சொல்லுங்கள் பார்ப்போம்.

வே—அரசே! இன்று தான் சுபமுகூர்த்த வேளையாயிருக்கிறதே! இன்றே நடத்திவிடவேண்டியது தானே?

நல்—அப்படியானல் அதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் எல்லாம் நடைபெறட்டும். விமரிசையாக இக்கல்யாணம்நடைபெறவேண்டும்.

[சந்திரகாசனையும், காமசுந்தரியையும் மணவரையிலிருத்தி, வேதியர் வேத மோதி மாங்கல்யஞ் சூட்டுகின்றார்.]

சுலோகம்.

சுக்லாம் பரதாம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
பிரசன்ன வதனம் த்யாயே
சர்வவிக்னேப சாந்தயே.

வே—மகராஜ்! மங்கள காரியங்கள் மங்களமாகவே நிறைவேறி விட்டது. நாங்களும் மங்களமாக விடைபெற்றுக்கொள்கிறோம்!

சந்திரகாசன் கலியாணம் தீர்ந்தவுடன் அலங்காரி தன் பந்துக்களுக்கு விருந்திடுகிறாள்.]

மூ—அத்தான் வாருங்கள்! சாப்பிடுங்கள்; தம்பி சாப்பிடவா!

[அலங்காரி தன் பந்துக்களுக்கு விருந்திடும்போது பெண், மாப்பிள்ளையை நீக்கி, மற்றவர்களெல்லாம் இறந்துபோகும்படி சூஸ்திரமண்டபத்தைத் தட்டி விடுகிறார்கள். அலங்காரியினுடைய பந்துக்கள் இறந்தவுடன் நல்லண்ணன் அலங்காரியின் கூந்தலைப்பிடித்திழுத்து]

வந்தாள் மதுரைச் சோக்கன் மைந்தா என்ற மெட்டு.

இராகம்-பார்ஸி-தாளம்-ரூபகம்.

வாடி யிப்படிக்குடி கேடி பொல்லாப்பாவிநிர் மூடி-தெய்வ
மங்கைதானெனு மென் நல்ல தங்கைக்கு வஞ்சகஞ்செய்த
மாயா ஜாலிவா யாடி (வா)

வைத்தானுனைப்புவி மீது--இனி
வந்திடுமேபெருந்தீது--அடி
மட்டியேநானுனைக் கட்டியுதைத்தும்
மொட்டையடித்தும் சட்டிகவிழ்த்தும்
மாய்ப்பேன் தீய்ப்பே னிப்போது (வா)

மானைப்பிடியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

நல்—இங்குவந்திட்டவென் தங்கைக்குத்தோதகம்
ஏண்டிசெய்தாயடி மூளி உன்
செங்கையிரண்டையும் பங்கப்படவேநான்
செய்திடுவேனே சண்டாளி

மூ—வந்தசக்களத்தி அந்தோ உனக்கேதும்
மந்திரஞ்சொன்னளோ பாவி அதால்
இந்தவிடம்வந்த பந்துக்களையெல்லாம்
இக்கோலஞ்செய்தனை மேவி

நல்—விந்தையாய்ப்பேசுறாய் இந்தமட்டுமுனை
விட்டுவிடுவேனோமூளி இங்கு
சந்துசந்தாகப் பிளந்திடுவேனடி
சாமர்த்யமான சண்டாளி

மூ—ஏதுசெய்தாயிந்தச் சூதுகளையோநீ
எக்குறியாவாயோ பாவி இந்தத்

தோதுமுனக்தெரி யாதுமே யான்மெத்தத்
துப்புக்கெட்டுப்போனேன் பாவி

நல்:—மட்டில்லாத் தங்கையைக் கெட்டவளென்று நீ
மன்னன் முன்னே சொன்னாய் மூளி-உனை
மொட்டையடித்துக் கழுதைமேலேற்றுவேன்
மோசமிகு பழிகாரி

மூ—ஆஹா! தெய்வமே என்னகாலம்! இறந்துபோய் விட்டார்களே! ஆஹா சண்டாளா! இப்படியும் பெருமோசம் செய்யலாமா? நீ செய்த சூதுகளை முன்னமே நான் தெரிந்திருந்தால் என் பந்துக்களுக்கு இந்த மண்டபத்தில் விருந்திடேனே ஐயோ!

நல்:—அடி துஷ்டி! என்ன சொன்னாய். உனக்குப் பந்துக்கள் வேறா! வா இப்படி நீ என்னுடைய அருமைத் தங்கையையும், அவள் ஈன்ற குழந்தைகளையும் அனியாயமாய்க் கொன்ற பாவியல்லவா?

[நல்லண்ணராஜன் மூளியலங்காரியை மொட்டையடித்துத் தண்டிக்கிறான்.]

கலித்துறை.

துஷ்டிஎன் னோடுபி றந்தநற் றங்கைஎன் சோதரியைக்
கிட்டவி டாம லடித்தது மன்றியுங் கேவலமாய்க்
கெட்டவளென் றுநீ என்னிடஞ் சொன்னாய்கெருவமன்றோ
மொட்டையடித்துக் கழுதைமே லேற்றி முடுக்குவனே

நல்:—ஹே சேவகா! அம்பட்டனைத் தருவிப்பாய்.

அம்:—மகாராஜ்! வந்தனம். கல்யாண் இந்தக்கள்ளியை மொட்டையடிப்பாயாக. மகாராஜ் இதோ மொட்டையடித்துவிட்டேன்.

நல்:—கல்யாண் தூதர்காள்! இந்தச் சண்டாளியின் முகத்தில் கறும்புள்ளி, செம்புள்ளி இட்டுக் கழுதையி லேற்றி ஊர்வலம் வருவதுடன் இவளைப்போல் சிலைபடித்து, நாலுதிக்கிலும் வருகிறவர், போகிறவர் காரி உமிழும்படி செய்வீர்கள்.

தூ:—மாராஜ்! அப்படியே செய்கிறோம்.

[மூளியலங்காரியைச் சுண்ணாம்புக் கால்வாயில் போட்டு நீத்திவிட்டு நல்லண்ணராஜன் இடத்து வந்து விபரத்தைச் சொல்லுகிறார்கள்.]

ஹே மகாராஜ்! அந்தச் சண்டாளியைச் சுண்ணாம்புக்கால் வாயில் வைத்துப் புரட்டிப் புரட்டி நீத்திவிட்டோம்.

நல்:—சந்தோசம் தூதர்காள்! இந்தப்பிணங்களை எல்லாம் வண்டியிலேற்றி, வைகையாற்றில்கொண்டுபோய்த் தள்ளிவிடுவீர்கள்.

தூ:—உத்திரவின்படியே!

[காசிராஜன் பஞ்சம் தெளிந்த உடன் தன் சம்சாரத்தையும், பிள்ளைகளையும் கூட்டிச்செல்ல மதுரைமாநகரம் வருகிறான்.]

கா:—ஆஹா தெய்வமே! எனதுநாட்டில் பஞ்சமுறவும் அதினாலென் பாரியையும், குழந்தைகளையும் பிரிந்து கஷ்டப்படவும் விதியா? இருக்கட்டும் இப்பொழுது பஞ்சம் தெளிந்து எனது நாடு செழிப்படைந்திருப்பதினால் சென்று என் பாரியையும், குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு வருகிறேன்.

தாசராஜ தாசராஜ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஆதிசிவ சங்காரின் அருளிதோகாணேன்-என
தாவி தனைநிகர் தேவி எந்தவித மாணுளோ தோணேன்
அந்தோ இங்கிவள் வந்திடுதருணம் ஆகாக்குறியான-அடி
அனமேபோகா தெனஒருமாதால் அசரீதவாக்கான-நான்
அறைமொழிதனைமறுத் திறையவனருளினை வரிவையிங்குறலாகுள்
ஆனபெருமை போனவறுமைடியென்
றழைக்க வாலானேன் யான்
அழைக்க வாலானேன் யான்
அழைக்க வாலானேன் (ஆதி)

கா—ஐயோ! அவள் வரும்போது அநேக விதமான துற்சகுனங்கள் நேர்ந்தது. அதையும் மீறிவிட்டு வந்தனள். என்னஸ்திதியில் இருக்கின்றனளோ அறிகிலேன்.

[காசிபனும் நல்லண்ராஜனும் சந்தித்த ஒருவரோடொருவர் பேசிக்கொள்கின்றனர்.]

இராகம்-இந்துஸ்தான்-கமாஸ்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மைத்துனரே மைத்துனரே மைத்துனரே (மை)

கா—மைத்துனரே எந்தன்மீது வார்த்தையாடாக்கோபமேது
வலியவந்தேனே இப்போது வாடியிருப்பதென் சூது (மைத்)

நல்—மைத்துனரே வாருமையா வந்ததென்று கூறுமையா
மங்களகுணகரனே வரவையெதிர் பார்த்தேன் நானே (மைத்)

கா—எந்தனுயிரானதேவி மைந்தருடனிங்குமேவி
வந்தனளேக்ஷேமந்தானோ நொந்துடனழுவதேனோ (மை)

நல்—தக்கநம்பெருஞ்சிமாட்டி மக்களெழு வரைக்கூட்டி
ஒக்கவேமடிந்திட்டாளே திக்கில்லாததாலிந்நாளே (மைத்)

கா—மடிந்ததுவுமுண்மை தானோ மற்றிதென்னகேலிதானோ
நடந்ததைவழுத்துவீரே நாயகிக்கு மைத்துனரே (மைத்)

நல்—கேலிக்கிந்த வார்த்தைதானோ. கேட்பதுவும் நேர்த்திதானோ
மூளியலங்காரியாலே மோசம்வந்த திந்தக்காலே (மைத்)

கா—ஆஹா மைத்துனரே! என் விசனமாய் வீற்றிருக்கின்றீர்? என்ன காரணம்? ஐயோ வீட்டில் ஒருவரும் இல்லையே! பெண்டு பிள்ளைகள் எல்லாம் எங்கே காணோம்?

நல்—என் தேவியாகிய சண்டாளி செய்த வஞ்சனையினாலே ஆரண்யஞ்சென்று பாழுங்கேணியில் வீழ்ந்து இறந்து விட்டனர். உடனே யான் "எனது மைந்தனுக்குக் கல்யாணம்" என்று அந்த மூளியலங்காரியினுடைய பந்துக்களை எல்லாம் வரவழைத்து, சூஸ்திரமண்டபங்கட்டி, அதில் விருந்திட்டு, அந்த மண்டபத்தைத்தட்டி அவர்கள் இறந்துபோகும்படி செய்து, பழிக்குப்பழிவாங்கி, அந்த மூளியலங்காரியையும் மொட்டையடித்துக் கழுதையின்மீதிலேற்றி, நான்கு திசையுஞ்சுற்றிவரச் செய்து, சுண்ணாம்புக்கால்வாயில் வைத்து நீத்திவிட்டேன்.

கா—மைத்துனரே! அப்படியா! என்தேவியும், குழந்தையும் இறந்த இடத்தையாவது காண்பியுங்கள். அவளை யான் பார்க்காவிடினும், அந்த இடத்தையாவது பார்த்துக்கொள்கிறேன்.

நல்—ஆனால் அப்படியே வாரும் காண்பிக்கிறேன்.

காசிபராஜன் தன்மனைவி, பிள்ளைகள் இறந்த இடத்தைப் பார்த்துத் துயரப் படுகிறான்.]

பாலா என்ன காலம் வந்ததடா என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பெண்ணே நீயும் விண்ணுலகமடைந்தாயோ இறந்தாயோ-அடி-
பிள்ளைகளுடனே உள்ளமகிழ்ந்துமித் தொல்லுலகந்நிலை
யல்லவென்றெண்ணியே (பெ)

அண்ணன் பதி நண்ணிச் சுகமுறநீயே இங்குற்றாயே-ஐயோ
ஆவிதளருதே பாவி யெனை யிந்தப் பூவுலகில் விட்டு
நீ விரைவிற் சென்றாய் (பெ)

பஞ்சந்தீரவஞ்சிவருவேனென்றாயே ஐயோநீயே-இந்தப்
பாழுங்கிணற்றினில் எழுபிள்ளையுடன் மாளும்படிக்கென்ன
காலம் வந்ததடி (பெ)

தஞ்சமற்ற பஞ்சையாய்ப் போனேனே நானே மடமானே-அடி
தக்கஎன்வயிற்றில் அக்கினியைவைத்து மக்களுடன்வந்து
ஒக்கவேமாண்டாயோ (பெ)

மைந்தருடன் அந்தோ என்வார்த்தைகேளாது புவிமீது-அடி
மாதேநீயும்பிடி வாதமிகச்செய்து நோதகமாய்வந்து
சாதலும் நீதியோ (பெ)

உன்னுடனே என்னுயிரையும் மாய்த் திடுவேன் இங்கு-படுவேன்
உத்தமியேயிது அத்தனுடகூது கத்தியெடுத்திதோ
குத்திக் கொள்வேனடி (பெ)

ஆஹா! கண்மணி! என்னை மோசஞ்செய்து, பிள்ளைகளுடனே வந்து, சுவர்க்கலோக மடைந்து விட்டனையா? ஆஹா! இப்படியுஞ் செய்ய எத்தனை நாளாய்க் காத்துக்கொண் டிருந்தனையோ! அறிகிலேன். "ஏதாவது இடையூறு நேரிடில் நாங்களெல்லோரும் மடிவோம்" என்ற வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டனை. ஆஹா! யானுன்னை இழந்து, யான் மட்டும் புவியிலிருப்பதில் என்ன பயன்? இதோ யானும் குத்திக்கொண்டு சுவர்க்கபதி யடைகிறேன்.

நல்ன்—ஆஹா சிவமே! இதுவும் நின்சோதனையா! ஐயோ! என் தங்கையையும், அவளுடைய அருமைப் பாலர்களையும், என் மைத்துனனையும் இழந்து, யான் புவியில் ஜீவித்திருப்பதில் என்னபயன்? இதோயானும் இறந்துபோகிறேன்.

[பரமசிவன் பார்வதிசமேதராய்
அவ்விடத்திற் பிராப்தமாகி,]

பர:—ஹே உத்தம புருஷா! உன்னைப் போன்ற சத்திய வந்தனை யான் எங்கும் பார்த்ததில்லை. நீ கொலைசெய்துகொள்ளவேண்டாம். சற்றுநில். இதோ அருந்ததிக்குச் சமானமாகிய "குலசேகரி" என்ற நல்லதங்காளையும் உயிருடன் எழுப்பித்தருகிறேன். அவளுடைய பாலர்கள் எழுவருக்கும் உயிரளிக்கிறேன். இது நிற்க, உத்தம புருஷனுகிய காசிபனையும் உயிருடன் வரச்செய்கிறேன். உனக்குவேண்டிய வரமளிக்கிறேன்.

நல்ன்: ஆஹா! என்ன? ஓர்விதமான அசரீரி வாக்குண்டானது. இக்காலத்திலுமா அசரீரி ஏற்படும்? சற்று நிதானிப்போம்.

[நல்லண்ணன் பரமசிவனைக்
கண்டு தெரிசிக்கிறுன்.]

ஹே காசிவிஸ்வநாதா? கைலயங்கிரிவாசா! மாசில்லாஜோதி மணிவிளக்கொளியே! பாவியாகிய யான் தங்கைக்காண என்ன தவஞ்செய்தேனே? நமஸ்காரம். எனக்கு நற்பதவி வேண்டும்.

[நல்லதங்காளும் எழுபிள்ளைகளும், காசி
பாஜனும் உயிர்பெற்றெழுந்து, பரமசி
வனைக்கண்டு தோத்திரஞ் செய்கிறுர்கள்]

கா—உலகெலா முணர்ந்தோதற் கரிய: கடவுளே! வணங்குகிறேன்.

பர—கல்யாண் பாலகா! அருகினில் வருவாயாக.

குல—பரிபூரண நித்தியானந்த சாக்ஷாத் கைலயங்கிரிவாசனே! அடியாள் வந்தனம்.

பர—கல்யாண் குலசேகரி!

"பெண்ணிற் பெருந்தகை யாவுள கற்பெனுந்
திண்மையுண் டாகப் பெறின்"

என்பதாய்த்! தெய்வத் தன்மை பொருந்திய திருவள்ளுவர் இசைத்திருப்பதற்கொக்க நின்னைக் காதலியாகக் கொண்ட காசிபனுக்கு யாதொரு குறைவும் கிடையா! ஆனது பற்றி மங்களமாய் உமது ராச்சியமாகிய வடமதுராபுரியை அரசாட்சிசெய்து, கடைசியில் எமது பதவியடைவீர்களாக.

குல—கடவுளே! தங்களாக்ஞைப்படி.

பர—ஹே குலசேகரி! உனக்கு யாதுவரம் வேண்டும்? கேட்பாயாக!

குல—ஹே ஜெகதீசா! எக்காலும் உலகத்தில் என்னுடைய பெயரோங்கவும், யாளொரு தெய்வமாய் வழங்கவும் கிருபை புரிய வேணுமென்று அடியாள் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

பர—குலசேகரி! அவ்விதமாகவே தந்தோம். நிற்க உன்னை வஞ்சகம்பண்ணிப் பசிக்கு அன்னமளிக்காது விரட்டிய சண்டாளி

யாகிய மூளியலங்காரியை ஏழேழுபிறவிக்கும் கழுதை, நாய், புழு, முதலிய சில செந்துக்களாய்ப் பிறக்கச் செய்து, ஒவ்வொரு பிறவியிலும் அக்கினியில் இறக்க வழி காட்டுவதுடன் அவளுடைய பெயரை யாவரும் தூஷிக்கவும் வரமளித்தேன். சுகமாய்ச் சென்று மகுடாபிஷேகஞ்செய்து, ராஜ்யபரிபாலனம் புரிவீராக. ஈற்றில் உங்களுக்கு விமானமனுப்புகிறேன். நம்பதவி வருவீர்களாக. ஹே! நல்லண்ணா! நீ நமது மதுரைமாநகரத்தை எப்போதும்போல் அரசுபுரிவாய். உன்னை எனது தொண்டரில் சேர்ப்பித்தேன். உனக்கும் ஈற்றில் நற்பதவி அளிப்பேனாக.

நல்:—ஹே ஜெகதீசா! உத்திரவின்படியே நடந்துகொள்கிறேன்.

சுபம். சுபம். சுபம்.

காசிபனென் கோனுக்கும் கன்னிகுல சேகரிக்கும்
மாசிலாப் பேரேழு மைந்தர்க்கும்—ஈசனயன்
மாலும் வளர்மதுரை மன்னர்க்கும் பாரினிலெக்
காலுஞ் சுபமங் களம்.

வாழ்த்து.

திங்களோடு கங்கைதனை என்றவர்ணமெட்டு.

கண்ணிகள்.

ஞாலமீதுசீர்பெருகு நல்லதங்காள் வாழ்கவே
பாலரேழு பேருங்கூடப் பார்த்திபனும் வாழ்கவே
மால்பெருகு வடமதுரை மன்னவரும் வாழ்கவே
சேல்விழிதன் மாதர்களும் சீலர்களும் வாழ்கவே
வானவர்கள் மாதவர்கள் மானிடர்கள் வாழ்கவே
மானவர்க ளேமிகுத்திம் மானிலத்தில் வாழ்கவே
தேவரோடு மூவர் தமிழில் தேர்கவிஞர் வாழ்கவே
பாவலர்க்குதவிடுகோ பாலகிருஷ்ணன் வாழ்கவே

விருத்தம்.

பூதலம்வாழி விண்ணிற் புனைமிகு தேவர்வாழி
மூதவர் வாழியோங்கு முன்னவர் முதுவர்வாழி
மாதரா டவரும்வாழி மன்னுறு மரசர்வாழி
நீதமும் அறமுங்கல்வி நித்தமும் வாழ்க மாதோ

நல்லதங்காள் சரித்திரம்.

இரண்டாம் பாகம் முற்றிற்று.